# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

## ஆண்டு அறிக்கை 2011

**சூழல் அமைச்சு**

## தொலைநோக்கு

*"2020ஆம் ஆண்டுக்குள் நிலைத்திருத்தல் தேசிய அபிவிருத்திக்கும், இலங்கை மக்களின் சேமநலனுக்கும் மற்றும் பொருளாதாரத்திற்கும் இலங்கையைச் சுற்றி தீழ்ப்பு அற்ற கடல்சார் சுற்றாடல்"*

## செயற்பணி

*"தற்போதையதும், எதிர்காலத்திற்குமானதுமான சந்ததிகளின் கடல்சார் சுற்றாடலின் நிலைத்திருத்தல் முகாமைத்துவத்திற்கு பயனுறுதிவாய்ந்த ஒழுங்குவிதிகளின் வினைப்படுத்தலினதும், சம்பந்தப்பட்ட சர்வதேச சமவாயங்களினதும் பங்காளரின் ஒருங்கிணைப்பினதும் மற்றும் ஒன்றுதிரட்டலினதும் மற்றும் வேறு மூலவளங்களினதும் அமுலாக்கத்தினதும் ஊடாக இலங்கையின் நீர்ப்பரப்புக்களில் சடல் தீழ்ப்பை அடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் முகாமை செய்வதற்கும் அவசியமான திறன்களுடனும், தகுதியுடனும், தாபன ரீதியான கட்டமைப்பினதும் மற்றும் உட்கட்டமைப்பு வரைச்சட்டத்தினதும் முகவராண்மையொன்றாக இருத்தல்."*

## கூட்டுத் தகவல்

**பணிப்பாளர் சபை**

**தலைவர்**

திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும (சட்டத்தரணி)

**பணிப்பாளர்கள்**

திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ரூபசிங்க - (பிரதிநிதி – செயலாளர், சூழல் அமைச்சு)

கொமடோர் என்.ரொசைரோ - (பிரதிநிதி – இலங்கைக் கடற்படை தளபதி)

திருமதி எஸ்.என்.மாயாதுன்னே பண்டார - (பிரதிநிதி - செயலாளர், வெளி விவகார அமைச்சு)

திருமதி.கே.குணவர்தன - (பிரதிநிதி - செயலாளர், நிதி, திட்டமிடல் அமைச்சு)

திரு.எஸ்.பண்டார - (பிரதிநிதி - செயலாளர், மீன்பிடித்தொழில் அமைச்சு)

திரு.எ.டபிள்யு.எஸ்.எஸ்.ஆர்.வீரக்கோன் - (பணிப்பாளர் நாயகம், மேர்ச்சன்ட் ஷிப்பிங்)

திரு.மகேஷ் கட்டுலந்த - (கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்)

ரியர் அட்மிரல் எஸ்.ஆர்.சமரதுங்க - (பொது முகாமையாளர், MEPA)

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்**

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
758, 2ஆவது மாடி,
பேஸ்லைன் வீதி,
கொழும்பு 09.
தொலைபேசி: 2687520 /2690604/2690605
∴பக்ஸ்: 2687451/4615960
ஈ-மெயில்: info@mppa.gov.lk
இணையதளம்: mppa.gov.lk

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி
மக்கள் வங்கி

## சிரேஷ்ட முகாமைத்துவப் பணியாளர்

**தலைவர்**

திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும - சட்டத்தரணி

**பொது முகாமையாளர்**

ரியர் அட்மிரல் எஸ்.ஆர்.சமரதுங்க RSP, VSV, USP

**பிரதிப் பொது முகாமையாளர்**

கொமாண்டர் டபிள்யு.என்.தியம்பலனாகே

**சட்ட உத்தியோகத்தர்**

திருமதி எ.காரியவாசம் (LLB, M Sc.)

**கணக்காளர்**

திரு.டி.ஆர்.சி.ஜயவர்தன (B. Com. SP/LICA)

**உதவி முகாமையாளர் (செயற்பாடுகள்)**

திரு.எ.ஜே.எம்.குணசேகர (B Sc., M Sc.)

**உதவி முகாமையாளர் (மாகாணம்)**

திருமதி ரி.எஸ்.ரணசிங்க (B Sc.)
திருமதி ரேணுகா ரணவீர (B Sc.)
திரு.எல்.பி.ரைரஸ் (B Sc.)
திரு.எச்.ரி.என்.ஐ.பியதாச (B Sc., M.Sc.)

**உதவி முகாமையாளர் (கப்பல் அளவீடுகள்)**

திரு.ஆர்.என்.பிரியதர்ஷன (B Sc.)

**உதவி முகாமையாளர் (மனித வளங்கள்)**

திருமதி டபிள்யு.எச்.கே.ஹிற்றிபண்டார (B.Sc.)

**உள்ளக கணக்காளர்**

திருமதி ஆர்.எச்.எச்.பிரேமசந்திர (B.B.A)

**உதவி முகாமையாளர் (நிருவாகம்)**

திரு.எஸ்.எம்.சி.குமாரகே (B.B.M.G.T.Sp.)

**நிருவாக உத்தியோகத்தர்**

திருமதி ஜி.பி.நிலான்ஜனி (BA.Sp.)

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின்

## தொடர்பு விபரங்கள்

**தலைமை அலுவலகம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
758, 2ஆவது மாடி,
பேஸ்லைன் வீதி,
கொழும்பு 09.
தொலைபேசி: 2687520 /2690604/2690605
∴பக்ஸ்: 2687451/4615960
ஈ-மெயில்:info@mppa.gov.lk
இணையதளம்:mppa.gov.lk

**தென் மாகாண அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம் - காலி மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
04, குளோசன்பேக் வீதி,
மாகலே,
காலி.
தொலைபேசி: 091-2233547/0718-214184
∴பக்ஸ்: 091-2233547

**பிராந்திய அலுவலகம் - ஹம்பாந்தோட்டை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
1/2 , சிங்ககிரி,
பெத்தவல வீதி,
ஹம்பாந்தோட்டை.
தொலைபேசி: 047-2222372/0718181430
∴பக்ஸ்: 047-2222372

**பிராந்திய அலுவலகம் - புத்தளம் மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
இல.23 ஈபேர்ட் சில்வா வத்த,
கொழும்பு வீதி,
சிலாபம்
தொலைபேசி: 032-2222865/ 071-3351000
∴பக்ஸ்: 032-2222865

**பிராந்திய அலுவலகம் - கம்பஹா மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
இல. 704/9A, 2ஆவது கருணா,
கொழும்பு வீதி,
நீர்கொழும்பு.
தொலைபேசி: 031-2228606/718-100821
∴பக்ஸ்: 031-2228606

**கிழக்கு மாகாண அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம் - திருகோணமலை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
04, மைல் கல், சீனன்குடா,
திருகோணமலை.
தொலைபேசி: 026-2050805/0718-383363
∴பக்ஸ்: 026-2050805

**பிராந்திய அலுவலகம் - மாத்தறை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
இல.18 வில்மட் பாலசூரிய மாவத்தை,
நூபே,
மாத்தறை.
தொலைபேசி: 041-2234250/ 0718-100817
∴பக்ஸ்: 041-2234250

**பிராந்திய அலுவலகம் - களுத்துறை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
இல. 187, கொழும்பு வீதி,
பேருவளை.
தொலைபேசி: 034-2298407/0718-576401
∴பக்ஸ்: 034-2298407

## தலைவரின் செய்தி

2009 ஜனவரி 1 அன்று 2008இன் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு தடுப்பு நியதிச்சட்டம் செயற்பாட்டினுள் வந்தது. இந்த நியதிச்சட்டத்தின் வினைப்படுத்தலுடன் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையாக கடல்சார் தீழ்ப்பு தடுப்பு அதிகாரசபை மீள்பெயரிடப்பட்டது. நிலம் மீதான சூழலினதும், உயிரின் அமைப்புக்களினதும் பாதுகாப்புக்காக பலதரப்பட்ட சட்டபூர்வ சட்டங்களினால் ஆதரவளிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபை, வனத் திணைக்களம் மற்றும் வனவாழ்வு பேணல் திணைக்களம் போன்ற நன்கு தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் உள்ளன. மேலும், நிலச் சூழலுக்கான சேதம் கண்கூடானது என்பதுடன், இது நிருவாக மற்றும் அரசியல் அதிகாரவர்க்கத்தினரின் கவனத்தை தொடர்ச்சியாக ஈர்த்தெடுக்கின்றது. மறைந்தபோன ஆண்டுகளில் ஏதாவது மட்டுப்படுத்தல்கள் இன்றி கடலினுள் கழிவு கொட்டப்பட்டதுடன், கடல்சார் சூழல் முறைமைகளுக்கான விளைவிலான சேதம் தோதான முறையில் மதிப்பிடப்படவில்லை. எனவே, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு மிகவும் முக்கியமானதாகும்.

2011ஆம் ஆண்டின் போது அதிகாரசபையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்புக்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டது. இவ்வாண்டின் போது அண்ணளவாக 31 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டார்கள்.

2008இன் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு தடுப்பு நியதிச்சட்டத்தின் பிரகாரம், பெற்றோலியம் மற்றும் கடற்கரைக்கப்பாலான ஆராய்ச்சி மற்றும் பயன்பாடு ஆகியன உட்பட இயற்கை வளங்கள் மீதான ஐந்து ஒழுங்குவிதிகள் வரையப்பட்டதுடன் (கடல்சார் சூழல் பாதுகாப்பு கட்டளை 2011/01) அத்துடன் இது வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் 2011 மே 21இலிருந்து செயற்படத்தக்கதாக அமுல்படுத்தப்படுகின்றது. இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் கடல்சார் சூழலை பாதிக்கும் கருத்திட்டங்கள் மீது சூழல் தாக்க மதிப்பீட்டு அங்கீகாரத்தை வழங்குவதற்கான அதிகாரம் க.சூ.ப.அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டின் கீழ் ஆண்டின் போது ரூபா 3.3 மில்லியன் கொண்ட வருமானமொன்றை க.சூ.ப.அ.சபை ஈட்டியது.

MT GRANBA கப்பல் விபத்தினால் விளைவிக்கப்பட்ட சேதத்திற்கான நஷ்டஈடாக ரூபா 5.6 மில்லியன் கொண்ட வருமானத்தை அதிகாரசபை பெற்றுக்கொண்டது. இவ்வருமானத்தில் சேமநலன் நடவடிக்கையொன்றாக உத்தியோகத்தர்களின் நன்மைக்காக ஆரம்பிக்கப்பட்ட கடன் திட்டமொன்றுக்கு ரூபா 4 மில்லியன் ஒதுக்கப்பட்டது. 12 மாதங்களைக் கொண்ட காலமொன்றுக்கு சம்பளங்களிலிருந்து கடன்கள் அறவிடப்பட்டன.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட மூலதன உதவுதொகை 100% பயன்படுத்தப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டுக்கு வருமானம் சுமார் 125%இனால் அதிகரித்துள்ளமை 2011ஆம் ஆண்டில் அதிகாரசபையின் குறிப்பிடத்தக்க சாதனையொன்றாகும்.

தீழ்ப்பை தடுப்பதற்காக சட்டபூர்வ ஏற்பாடுகளை உருவாக்குதல், ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல் மற்றும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல் ஆகியனவற்றின் மூலம் கடல்சார் சூழலைப் பாதுகாப்பதை நோக்கி பொதுமக்களினதும், அரசாங்கத்தினதும் அதிகரித்த விழிப்பியலும், ஈடுபாடுமே க.சூ.ப.அதிகாரசபைக்கு முன்னேயுள்ள சவால்களாகும். இவ்வாறாக கடல் சூழலின் தீழ்ப்பைத் தடுக்கும் இறுதியான குறிக்கோளைச் சாதிப்பதாகும். க.சூ.ப.அதிகாரசபையின் பணியாள் உறுப்பினர்களின் ஆதரவுடன் இக்குறிக்கோள்களை சாதிப்பதை நோக்கி நான் பாடுபடுவேன்.

ஆர்.எஸ்.ஆரியபெரும - சட்டத்தரணி
தலைவர்

## உள்ளடக்கம்


| | | பக்க இல. |
|---|---|---|
| 1. | பின்னணி | 1 |
| | 1.1 அறிமுகம் | 1 |
| | 1.2 அதிகாரசபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் | 2-3 |
| 2. | தொழிற்பாடுகளின் மதிப்பாய்வு | 4-13 |
| 3. | நிருவாக, மனித வளங்கள் அபிவிருத்தி, உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் சட்டப் பிரிவுகளின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் | 14 |
| | 3.1 நிருவாகப் பிரிவு | 14 |
| | 3.2 மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு | 14-17 |
| | 3.3 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 18 |
| | 3.4 சட்டப் பிரிவு | 19 |
| | 3.5 நிதிப் பிரிவு | 19 - 23 |
| 4. | அதிகார சபையின் இறுதிக் கூற்றுக்கள் | 24 |
| | 4.1 கணக்கீட்டுக் கொள்கைகள் | 24-25 |
| | 4.2 நிதிசார் நிலையின் கூற்று | 26 |
| | 4.3 நிதிசார் செயற்றிறனின் கூற்று | 27 |
| | 4.4 ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று | 28 |
| | 4.5 பணப்புழக்கக் கூற்று | 29 |
| | 4.6 நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 30-36 |
| 5. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 36-49 |

# 1. பின்னணி

## 1.1 அறிமுகம்

இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமான நிலையொன்றில் இலங்கை அமைந்துள்ளது. சர்வதேச ஒழுங்குவிதிகளின் பிரகாரம் இலங்கையின் நில திணிவின் அளவின் எட்டுத் தடவைகள் சமுத்திரத்தில் உள்ள பகுதியொன்றின் வளங்களை இலங்கை அறுவடை செய்வதற்கு உரித்தினைக் கொண்டுள்ளது. சமுத்திரத்தின் இப்பகுதி ஊடாக கிழக்கிலிருந்து மேற்கிற்கும், மேற்கிலிருந்து கிழக்கிற்கும் நகரும் கப்பல்களின் கப்பற்பிரயாண பாதைகள் அமைந்துள்ளன. எனவே, இலங்கையின் கண்காணிப்பின் கீழ் கடல் வலயத்தைச் சுற்றி வளங்கள் உள்ளன. ஆனால், சமுத்திரத்தில் கடற் பிரயாணத்தினதும், தொடர்பான செயற்பாடுகளினதும் மற்றும் நிலத்திணிவின் மீதான மனித செயற்பாட்டினதும் காரணமாக இவ் வளங்கள் தரம் குன்றுகின்றன.

கடல்சார் சூழலின் தீழ்ப்பை குறைந்த பட்சமாக்குவதற்கும், தடுப்பதற்கும் அவசியமான நடவடிக்கை எடுப்பதற்காக 1981இன் 59ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு தடுப்பு நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கடல்சார் தீழ்ப்பு அதிகாரசபை அமைக்கப்பட்டது. தீழ்ப்பின் நிகழ்வு மீது நடவடிக்கை எடுப்பதற்கும், கடல்சார் சூழலின் பாதுகாப்பு தொடர்பில் சர்வதேச சமவாயங்களை அமுல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்காக அதிகார சபைகளின் கைகளை மேலும் பலப்படுத்துமுகமாக கடல்சார் தீழ்ப்பு தடுப்பு நியதிச்சட்ட இல.59 இரத்து செய்யப்பட்டதுடன், 2009 ஜனவரி 1 அன்று அமுலுக்கு வந்த 2008இன் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு தடுப்பு நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த நியதிச் சட்டத்தின் கீழ் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையாக கடல் தீழ்ப்பு தடுப்பு அதிகாரசபை மீள்-பெயரிடப்பட்டது.

கடற்படை முனையொன்றாக இலங்கையின் அபிவிருத்தியை "மகிந்த சிந்தனை" வலியுறுத்துகின்றது. இப் புதிய தொலைநோக்கின் அங்கமொன்றாக புதிய துறைமுகங்கள் கட்டப்படுவதுடன், பழைய துறைமுகங்கள் மேலும் திருத்தப் படுகின்றன. மேலதிகமாக, சமுத்திரத்தின் வளங்களைப் பெறுவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் வகுத்தமைக்கப்படுகின்றன. இந்த அபிவிருத்தித் திட்டங்களின் காரணமாக இடம்பெறக்கூடிய ஏதாவது தீழ்ப்பைத் தடுப்பதற்காகவும் அத்துடன் அவற்றின் நிலைத்திருக்கும்தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும் க.சூ.பா. அதிகாரசபை கோரப்பட்டுள்ளது.

கடல்சார் சூழலின் தீழ்ப்பினை குறைந்தபட்சமாக்குவதற்கும், கட்டுப் படுத்துவதற்கும் அத்துடன் தடுப்பதற்கும் பொறுப்பான முகவராண்மையாக பன்மைத்தன்மையிலான திட்டங்களில் க.சூ.பா.அதிகாரசபை ஈடுபட்டுள்ளது.

## 1.2 அதிகாரசபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

(1) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தினதும், அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளை பயனுறுதியாகவும், திறமையாகவும் நிருவகித்தலும், நடைமுறைப்படுத்தலும்.

(2) இலங்கையின் ஆள்புல நீர்ப் பரப்புக்களில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயங்களில் அதன் கரை மீது கப்பல்சார்ந்த செயற்பாட்டிலும், கடல்சார் கரையோரம் தொடர்பான நடவடிக்கையிலும் இருந்து எழும் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், குறைப்பதற்கும், கட்டுப்படுத்து வதற்கும், முகாமை செய்வதற் குமான செயற்திட்டமொன்றை வகுத்தலும், நிறைவேற்றுதலும்.

(3) இலங்கை ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது வேறு ஏதேனும் கடலோர வலயத்தில் அதன் கரை முனங்கிலும் அல்லது இலங்கையின் கரையோர வலயத்திலும் ஏதேனும் கப்பல் சார்ந்த செயற்பாட்டினின்று அல்லது கடல்சார் கரைசார்ந்த கடலோரம் தொடர்பான செயற்பாட்டினின்று எழும் தீழ்ப்பைத் தடைசெய்யும், குறைக்கும், கட்டுப்படுத்தும் அத்துடன் முகாமை செய்யும் நோக்கத்திற்காக அரசாங்க மற்றும் தனியார் துறை திணைக்களங்களுடனும் முக வராண்மைகளுடனும் நிறுவனங் களுடனும் கூட்டிணைந்து ஆய்வு களை மேற்கொள்ளுதல்.

(4) இலங்கையின் கடற்கரையையும் மற்றும் அதன் கரையோர வலயத்தையும், அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப்படுத்தப் படவுள்ள இலங்கையின் அல்லது ஏதேனும் வேறு கரைசார்ந்த வலயத்தின் ஆள்புல நீர்ப்பரப்புக்களையும் நிருவகிப்ப தற்கும், பாதுகாப்பதற்கும், பேணிக் காப்பதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல்.

(5) ஏதேனும் எண்ணெய்க்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்திற்கு அல்லது வேறு ஏதேனும் தீழ்ப்பாக்கிக்கு போதியளவிலும், பயனுறுதியுடையதுமான ஏற்பு வசதிகளை வழங்குதல்.

(6) இலங்கை அரசாங்கம் ஏற்றங் கீகரித்துள்ள, ஏற்றுக்கொண்டுள்ள, இணங்கியுள்ள அல்லது அங்கீகரி த்துள்ள அல்லது ஏற்றங்கீகரிக்கக் கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய, இணங்கக்கூடிய அல்லது அங்கீகரிக்கக்கூடிய கடல்சார் தீழ்ப்பைக் கையாளும் எல்லா சர்வதேச சமவாயங்களையும், இயைபான பின்னேடுகளையும் கடைப்பிடிப்பதனை விதந்து ரைத்தல்.

(7) தேசிய எண்ணெய் தீழ்ப்பு எதிர்பாரா நிகழ்வுத் திட்டத்தை வகுத்தமைத்தலும், நடைமுறைப் படுத்தலும்.

(8) பெற்றோலியம் அல்லது அது தொடர்பான செயற்பாடுகள் உட்பட இயற்கை வளங்களின் நுண்ணாய்வை மேற்கொள்ளும் அல்லது அதில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்களினதும், சேவைத் துணை ஒப்பந்தக்காரர்களினதும் எவரேனும் ஆளினதும் நடத்தையை மேற்பார்வை செய்தலும், ஒழுங்குபடுத்துதலும், கண்காணித்தலும்.

(9) கடல்சார் சூழலைப் பேணிக் காக்கும் அவசியம் பற்றி சமுதாயத்தின் வெவ்வேறு குழுக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதல்.

(10) மேற்கூறப்பட்ட பணிகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத் தகைய எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் செய்தல்.

(11) இலங்கையின் ஆள்புல நீர்ப் பரப்புக்கள் அல்லது கடல்சார்ந்த வலயங்கள் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப்படுத்தப்படவுள்ள ஏதாவது வேறு கடல்சார்ந்த வலயத்தை ஏதாவது கப்பல் அடிப்படையிலான அல்லது கடல் அடிப்படையிலான கடல்சார்ந்த தொடர்பிலான நடவடிக்கையினால் பயனுறுதியுடன் பாதுகாத்தலும், பேணிக் காப்பாற்றுதலும்.

(12) ஏதாவது கப்பல் அடிப்படையிலான நடவடிக்கைகளிலிருந்து அல்லது கரை அடிப்படையிலான நடவடிக்கையிலிருந்து எழுகின்ற ஏதாவது தீழ்ப்பு தொடர்பில் ஆய்வுகளையும், விசாரணை களையும் நடத்துதலும், சட்ட நடவடிக்கையை ஆரம்பித்தலும்.

(13) தீழ்ப்பின் தடுத்தல் நோக்கத் திற்காக இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புக்களின் அல்லது கடல்சார்ந்த வலயங்கள் சட்டத்தின் கீழ் பிரகடனப் படுத்தப்பட்ட அல்லது அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப் படுத்தப்படவுள்ள ஏதாவது வேறு கடல் சார்ந்த வலயத்தில் மேற்கொள்ளப்படும் எண்ணெயின் சகல கடல் போக்குவரத்தையும், எண்ணெய் நிரப்புதல், இறக்குதல் செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தல்.

# 2. தொழிற்பாடுகளின் மதிப்பாய்வு

2008இன் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு நியதிச்சட்டத்தின் அமுலாக்கமே கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதான பொறுப்பாகும். கப்பல்களினாலும், நில அடிப்படையிலான செயற்பாடுகளி னாலும் மற்றும் கடல்சார் சூழலைப் பாதிக்கின்ற கடல்சார் சூழலில் நிறைவேற்றப்படுகின்ற வேறு செயற்பாடுகளினாலும் விளைவிக்கப் படும் கடல்சார் தீழ்ப்பினை குறைந்தபட்சமாக்குவதற்கும், கட்டுப் படுத்துவதற்கும் அத்துடன் நிருவகிப் பதற்கும் ஆண்டின் போது அதிகார சபையினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை கீழே வழங்கப்பட்டுள்ளது.

நில மற்றும் கடல் அடிப்படையிலான செயற்பாடுகளினால் விளைவிக்கப் படுகின்ற கடல்சார் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்கும், கட்டுப்படுத்தும் மற்றும் நிருவகிக்கும் நோக்கத்திற்காக கொள்கையை வகுத்தமைப்பதிலும் அத்துடன் கொள்கைகளின் அமுலாக்கத்திற்கு அவசியமான சகல தொழில்நுட்பத் தொழிற்பாடுகளிலும் அதிகாரசபையின் தொழில்நுட்பப் பிரிவு ஈடுபட்டுள்ளது. தமது செயற்பாடுகளின் அங்கமொன்றாக தொழில்நுட்ப தேவைப்பாட்டினையும், மற்றும் சட்டத் தேவைப்பாட்டினையும் அவர்கள் கட்டுப்படுவதை உறுதிப்படுத்துமுகமாக பகுதியில் செயற்பாடுகளில் சம்பந்தப் பட்டுள்ளவர்களுக்கு உத்தரவுப் பத்திரங்களை தொழில்நுட்பப் பிரிவு வழங்குகின்றது.

## 01. தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகால திட்டம் (NOSCOP)

### 1.1 மாவட்ட மட்டத்தில் விழிப்பியல் செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கையின் கரையோர வலயத்தில் அவசரகால எண்ணெய் சிந்துதலினால் விளைவிக்கப்படக்கூடிய சூழல் சேதத்தை குறைந்தபட்சமாக்குவதற்குப் பொறுப்பான அதிகாரசபையாக க.சூ.பா.அதிகார சபையானது 1995இல் “தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டத்தை (NOSCOP)” வகுத்தமைத்துள்ளது. இத்திட்டம் பெருமளவு சந்தர்ப்பங்களில் புதுப்பிக்கப்பட்டதுடன், 2004ஆம் ஆண்டில் மந்திரிகளின் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. அவசரகால எண்ணெய் சிந்துதல் நிகழ்வில் அமுல்படுத்தப்படுவதற்காக கிட்டுகின்ற ஒரேயொரு தேசிய அவசரகாலத் திட்டம் இதுவாகும்.

NOSCOPஇன் பிரகாரம் பெருமளவு அரசாங்க முகவராண்மைகளினதும், அரசாங்க சார்பற்ற முகவராண்மை களினதும் அதிகாரிகளுக்கும் மற்றும் தேசிய மற்றும் மாகாண அரசியல் தலைமைத்துவத்திற்கும் விசேடமான பொறுப்புக்கள் குறித்தொதுக்கப் பட்டுள்ளன. இத் திட்டத்தின் அமுலாக்கத்திற்கு அவர்களது பங்களிப்பு அத்தியாவசியமானதாகும். திட்டத்தின் அமுலாக்கத்தில் சகல பங்காளர் மத்தியில் இவ்விடயம் மீது விழிப்பியலை உயர்த்துமுகமாக 2011இல் க.சூ.பா. அதிகாரசபையினால் நாடுபூராவிலுமான திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரகாரம் புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோண மலை ஆகிய மாவட்டங்களின்

கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 2011இல் 18 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டங்களின் போது கலந்துரையாடப் பட்ட விடயங்கள் வருமாறு:

அ) கடல்சார் சூழலின் முக்கியத்துவம்

ஆ) கடல்சார் சூழல் மீது எண்ணெயின் தாக்கம்

இ) தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டம்

ஈ) திருத்தியமைக்கப்பட்ட அதிகரிப் பொன்றை செய்தல் (அவசர காலத்தின் போது கடலில் கிட்டுகின்ற பொருட்களைப் பயன்படுத்தி எண்ணெய் பரவுவதை தடுப்பதற்கான தடை)

அவசரகால எண்ணெய் சிந்துதலின் நிகழ்வில் தாமதமின்றி வேறுபட்ட நிறுவனங்களிலிருந்து அவசியப்பட்ட பதிலிறுப்பினை உறுதிப்படுத்துமுகமாக பயிற்சி நடத்தப்பட்டது.

## 1.2 முதலாவது பதிலிறுப்பாளருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டத்தின் பிரகாரம் அவசியப்பட்ட பதிலிறுப்பு மீது எண்ணெய் சிந்துதல் ஒன்றின் நிகழ்வில் முதலில் பதிலிறுப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நபர்களின் விழிப்பியல் மட்டம் எண்ணெய் சிந்துதலின் தாக்கத்தின் கட்டுப்பாட்டில் முக்கியமானதாகும். ராஜகிரியவிலுள்ள விதுபியச கேட்போர்கூடத்தில் 2011, டிசம்பர் 14-16 வரை முதலாவது பதிலிறுப்பாளர்களுக்கான மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை க.சூ.பா. அதிகாரசபை நடத்தியது. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக கொழும்புத் துறைமுக இடப்பரப்பில் செயன்முறை பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடத்தப்பட்டது. இராணுவம், கடற்படை மற்றும் விமானப் படை, சிவில் பாதுகாப்புத் திணைக்களம் துறைமுக அதிகாரசபை, மத்திய சூழல் அதிகாரசபை, இடராபத்து முகாமைத்துவ நிலையம், தேசிய நீரியல் வளங்கள், ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை ஆகியவற்றிலிருந்து அண்ணளவாக 70 பயிற்சியாளர்கள் நிகழ்ச்சியில் பங்கெடுத்தனர். எண்ணெய் சிந்துதலின் இடராபத்தின் மதிப்பாய்வு, தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டம், சூழல் மீது எண்ணெயின் தாக்கம், அவசரகால சூழ்நிலையொன்றில் பதிலிறுப்பதில் நடவடிக்கைத் திட்டம், எண்ணெய் சிந்துதலின் பின்னர் சேகரிக்கப்பட்ட கழிவைப் பாதுகாப்பாக வைத்தல், ஏற்றியிறக்குதல் மற்றும் பெறுதல் ஆகியனவே நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களாகும்.

## 1.3 இரசாயனங்களின் எண்ணெய் சிந்துதலின் நிகழ்வில் பதிலிறுப்பு

எண்ணெய் சிந்துதல் நிகழ்வினைப் போன்று இரசாயனங்களின் சிந்துதல் காரணமாக சூழலுக்கான சேதம் பாரதூரமாக விளங்க முடியும். இரசாயன சிந்துதல் ஒன்றின் நிகழ்வில் வெளிக்கள அவதானிப்புகளில் க.சூ.பா.அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் பங்கெடுத்தனர். அத்தகைய அவதானிப்பு களில் பங்கெடுக்கும் போது பயன்படுத்துவதற்காக இரு பாதுகாப்பு பொட்டளிகளை வாங்குவதற்கு 2011இன் போது நடவடிக்கை எடுக்கப்பட்டது (தொழிற்பாட்டுச் செயற்பாடுகளில் இரசாயனங்களின் சிந்துதல்களின் அவதானிப்பு மிகவும் முக்கியமானதாகும்).

## 02. சர்வதேச சமவாயங்கள் மற்றும் சட்ட செயற்பாடுகள்

### 2.1 2008இன் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு தடுப்பு நியதிச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை அமைத்தல்

2008இன் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு நியதிச்சட்டத்தின் கீழ் பத்து புதிய ஒழுங்குவிதிகள் வரையப்பட்டு அவற்றின் மொழிபெயர்ப்பு 2011இல் முடிக்கப்பட்டது. இந்த நியதிச் சட்டத்தின் கீழ் முதலாவது ஒழுங்கு விதி அதாவது கடற்கரைக்கப்பாலான ஆராய்ச்சி மற்றும் பெற்றோலிய மற்றும் வேறு இயற்கை வளங்களின் பயன்பாடு என்ற 2011இன் ஒழுங்குவிதி இல.1ஆனது 2011 ஜுன் 07 அன்று வர்த்தமானி அறிவித்தலொன்றாக வெளியிடப்பட்டது. எண்ணெய் ஆராய்ச்சியிலிருந்து விளைகின்ற தீழ்ப்பைக் குறைந்தபட்சமாக்குவதற்கு எடுக்கப்படுவதற்கான நடவடிக்கையை இந்த ஒழுங்குவிதிகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த ஒழுங்கு விதிகளின் பிரகாரம் எண்ணெய் ஆராய்ச்சியைப் பொறுப்பேற்கும் சகல ஒப்பந்தக்காரர்களும் அத்தகைய பொறுப்பு முயற்சிகளுக்காக க.சூ.பா. அதிகாரசபையிலிருந்து உத்தரவுப் பத்திரங்களை பெறவேண்டும்.

இந்த ஒழுங்குவிதிகளின் அறிமுகத்தின் பின்னர் எண்ணெய் ஆராய்ச்சிக்காக சூழல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் 2011இல் ரூபா 3.3 மில்லியன் கொண்ட வருமானமொன்றை அதிகார சபை ஈட்டியுள்ளது.

2.2 2008இன் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு நியதிச் சட்டத்தின் பிரிவு 51(2)இன் கீழ் பதினெட்டு ஒழுங்குவிதிகளில் பத்து ஒழுங்குவிதிகள் வரையப் பட்டு சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புக்களுடன் சட்ட திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு ள்ளன.

2.3 எண்ணெய் சேமித்தல் மற்றும் தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்டம் ஆகியன தொடர்பிலான ஒழுங்குவிதியின் இறுதியான வரைவுகள் சட்டவரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறுதியான உடன்பாட்டினை அடைந்த பின்னர் கிட்டிய எதிர்காலத்தில் வர்த்தமானி அறிவித்தலொன்றாக இவை வெளியிடப்படும்.

## 03. பாடசாலைக் கடல்சார் குழுக்கள்

கடல்சார் சூழலின் முக்கியத்துவத்தையும், கடல்சார் சூழல் தீழ்ப்பின் தடுப்புக்கான அவசியத்தையும் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்காக பெருமளவு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. க.சூ.பா. அதிகாரசபையினால் பின்பற்றப்பட்டுள்ள முறைகளில் பாடசாலைச் சிறுவர்களை இலக்குப்படுத்துவது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

2011ஆம் ஆண்டின் போது பாடசாலை கடல்சார் குழுக்களின் எண்ணிக்கை 225க்கு அதிகரித்துள்ளது. இக்குழுக்கள் ஹம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய கரையோர மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. 2011இன் இறுதிக்குள் இச் சங்கங்களின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 5,625க்கு மேற்பட்டதாகும். அவற்றின் விழிப்பியல் மட்டத்தை உயர்த்துவதற்காக கரையோர மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் 250 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

பாடசாலை கடல்சார் குழுக்களின் அடையாளச் சின்னமொன்றுக்கான தெரிவில் கரையோரப் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகள் பங்கெடுப்பதற்காக போட்டியொன்று நடத்தப்பட்டது. மாவட்ட மட்டத்தில் இப்போட்டியில் வெற்றியீட்டியோருக்கு சான்றுப்பத்திரங்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன. மொத்தமாகவுள்ள 70 பாடசாலைகளில் ஏழு மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொன்றும் பத்து பாடசாலைகள் கடல்சார் தகவல் நிலையங்களைப் பராமரிக்கின்றன. சஞ்சிகைகள், நூலேடுகள், துண்டுப் பிரசுரங்கள், தேசப்படங்கள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் அவற்றை மேம்படுத்துவதற்கு 2011இல் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டது.





## 04. உலக சமுத்திர தினக் கொண்டாட்டம்

2011 உலக சமுத்திர தினத்தின் கருப்பொருள் "எமது சமுத்திரங்கள் - எமது எதிர்காலத்தை பசுமைப் படுத்தல்" என்பதாகும். உலக சமுத்திர தினத்தைக் குறிப்பதற்கான தேசிய கொண்டாட்டம் பிரதம விருந்தினராக கௌரவ சூழல் அமைச்சர் திரு.அனுர பிரியதர்ஷன யாபாவுடன் கொழும்பு துறைமுகத்தில் ஜெட் லைனர் கப்பலில் 2011 ஜூன் 01 அன்று க.சூ.பா.அதிகார சபையினால் ஒழுங்குசெய்யப்பட்டு, நடத்தப்பட்டது.



கொண்டாட்டங்களில் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சமந்த ஹெட்டிஆரச்சி "சமுத்திர அழிவுகளும், அவற்றின் தாக்கமும்" என்ற விடயம் மீது விரிவுரையொன்றை ஆற்றினார்.

இவ் வைபவத்தில் "சத் சமுத்திர" என்ற க.சூ.பா.அதிகார சபையின் வருடாந்த வெளியீடு வெளியிடப் பட்டது. அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட சுமார் 250 பேர் நிகழ்வில் பங்கெடுத்தனர்.



## 05. சர்வதேச கரையோர தூய்மைப்படுத்தல் தின நிகழ்ச்சித்திட்டம்

உலகிலுள்ள பெருமளவு நாடுகள் செப்ரெம்பர் 3 சனிக்கிழமை அன்று சர்வதேசக் கரையோர தூய்மைப் படுத்தல் தினத்தைக் கொண்டாடு கின்றன. 2008 முதல் இந் நிகழ்ச்சித்திட்டத்தில் இலங்கை பங்கெடுக்கின்றது. கரையோரத்தை அசுத்தமாக்குவதில் நில அடிப்படை யிலான மூலங்களின் வகிபங்கு மீது பொதுமக்களை விழிப்படையவைப்பதை நிகழ்ச்சித்திட்டம் முயற்சிக்கின்றது. 2011 செப்ரெம்பர் 13-16இன் போது புத்தளம், கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 22 தெரிவுசெய்யப்பட்ட நிலையங்களில் கரையோர தூய்மைப் படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. பிரதான நிகழ்ச்சித் திட்டம் செம்ரெம்பர் 19 அன்று அண்ணளவாக 1,500 பேரைக் கொண்ட பங்கெடுப்புடன் பருத்தித் துறையில் நடைபெற்றது. சகல நிகழ்ச்சித்திட்டங்களிலும் மொத்த பங்கெடுப்பு சுமார் 3,500 என்பதுடன், இவர்கள் மத்தியில் பாடசாலைச் சிறுவர்கள், அரசாங்க உத்தியோக த்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரச சார்பற்ற தாபனங்களின் உறுப்பினர்கள் விளங்குகின்றனர்.



மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களின் போது சேகரிக்கப்பட்ட கழிவு வகைப்படுத்தப் பட்டதுடன், பெறப்பட்ட தரவுகள் சர்வதேச பார்வையாளர்களை அடையும் ஊடகத்தில் வெளியிடுவதற்காக சர்வதேச சமுத்திர பேணல் மையத்திற்கு அனுப்பப்பட்டன.







## 06. நீரின் தரத்தை சோதித்தல்

### 6.1 கடல் வீழ்படிவின் நீர்த்தரத்தை சோதித்தல்

சமுத்திரத்தின் தீழ்ப்பை விளைவிக்கும் காரணிகளில் பெரும்பான்மையிலான பகுதி நிலம் அடிப்படையிலானதாகும். கடலினுள் பாயும் நீருடன் கடலினுள் தீழ்ப்புக்கள் பிரவேசிப்பதுடன், கடலினுள் பிரவேசிக்கும் நீரின் தரத்தை உறுதிப்படுத்துவது கடலின் தீழ்ப்பைத் தடுப்பது மீதான நடவடிக்கையை எடுப்பதில் பயனுள்ளதாகும்.

2011 முழுவதும் தெரிவுசெய்யப்பட்ட அமைவிடங்களில் கடல் வீழ்படிவின் நீரின் தரத்தின் சோதனை ஹம்பாந்தோட்டையிலிருந்து புத்தளம் வரையிலான சகல கரையோர மாவட்டங்களில் க.சூ.பா.அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டது. இந்நோக்கத்திற்கு அவசியமான கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டு மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப் பட்டன.

### 6.2 குளிக்கும் அமைவிடத்தில் நீரின் தரத்தைச் சோதித்தல்

கடலில் குளித்தல் ஒரு முக்கியமான பொழுதுபோக்கிலான செயற்பாடாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கடலில் குளிப்பதில் மகிழ்ச்சியடைவதுடன், இது கரையோர வலயத்தில் பொதுவான காட்சியொன்றாகும்.

கடலில் குளிப்பதற்கான மிகவும் பிரசித்தமான அமைவிடமொன்றான பேருவளையிலுள்ள மொறகொல்ல நீரைச் சோதிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டது. 2011 முழுவதும் இந்த அமைவிடத்தில் நீரைச் சோதித்தல் க.சூ.பா.அதிகாரசபையினல் நடத்தப் பட்டது.

கடலில் குளிக்கும் அமைவிடங்களில் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்கு அவசியமான நடவடிக்கையை எடுப்பதே இச் சோதனைகளின் நோக்கமாகும்.





## 07. விழிப்பியல் நிகழ்ச்சித்திட்டங்கள்

### 7.1 அரசாங்க உத்தியோகத்தர்கள், உணவக ஊழியர்கள் மற்றும் மீனவர் உட்பட பொதுமக்கள் மத்தியில் விழிப்பியலை உயர்த்துதல்

கடலின் தீழ்ப்பினைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படக்கூடிய இன்னொரு முக்கியமான நடவடிக்கையாக வேறுபட்ட பங்காளர் மத்தியில் விழிப்பியலை உயர்த்துவதேயாகும். எனவே, நாட்டின் கரையோரப் பகுதியிலுள்ள உணவக ஊழியர்களுக்கும், மீனவர்களுக்கும் சுமார் 50 செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

### 7.2 விழிப்பியலை உயர்த்துவதற்காக அறிவித்தல் பலகைகளை நிறுவுதல்

கடல்சார் தீழ்ப்பினைத் தடுக்கும் முக்கியத்துவத்தையும், அது தொடர்பிலான சட்டபூர்வ ஏற்பாட்டினையும் விளக்கி அறிவித்தல் பலகைகளை நிறுவுவதற்கு 2011இன் போது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆண்டின் போது வடக்கு மற்றும் கிழக்கு உட்பட கரையோர மாவட்டங்களில் மொத்தமாக 120 அறிவித்தல் பலகைகள் நிறுவப்பட்டன.

### 7.3 பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்கள்

“அபட்ட சமீப எத சமுத்ர” என்ற தலைப்பிலான க.சூ.பா.அதிகார சபையின் பணிகளினதும், விஸ்தரிப்பினதும் மற்றும் எதிர்காலத் திட்டங்களினதும் மீதான ஒரு வீடியோ கருத்துப்படம் தயாரிக்கப்பட்டது. இது க.சூ.பா.அதிகார சபை மீதான விழிப்பியல் இயக்கங்கள் தொடர்பில் பயன்படுத்தப்பட்டது. அதிகார சபையின் செயற்பாடுகள் மீது விழிப்பியலை உயர்த்துவதற்காக இரு மாதங்களைக் கொண்ட காலத்திற்கு வானொலியில் “சுரக்கிமு சமுத்ர” என்ற தலைப்பிலான நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.





## 08. கப்பலினால் தோற்றுவிக்கப்பட்ட கழிவைப் பெறுவதற்கான வசதிகள்

கப்பல்களினால் விளைவிக்கப்படும் கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பது மீதான சர்வதேச சமவாயத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. இந்த சமவாயத்தின் பிரகாரம் இலங்கைத் துறைமுகங்களில் நங்கூரமிடும் கப்பல்களுக்கு கழிவை அகற்றுதல் வசதிகள் வழங்கப்பட வேண்டும். கப்பல்களினால் வெளியேற்றப்படும் கழிவு எண்ணெயினதும் குப்பையினதும் காரணமான தீழ்ப்பைத் தடுக்குமுகமாக கப்பல்களுக்காக கழிவு பெறுதல் சேவையொன்றை க.சூ.பா.அதிகார சபை செயற்படுத்துகின்றது. இச் சேவை கொழும்பு மற்றும் காலி ஆகிய துறைமுகங்களில் செயற் பாட்டிலுள்ளது. மூன்றாந் தரப்புக்களாக கப்பல்களிலிருந்து கழிவைப் பெறுவதை கையாள்வதற்கு நிறுவனங்களின் பயன்பாட்டினை அதிகார சபை பெறுகின்றது. ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்தில் இச் சேவையை வழங்குவதற்கு தகுதியைக் கொண்டுள்ள நிறுவனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. 2011ஆம் ஆண்டுக்கு இருபது நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டன. கப்பலுக்கு அவை சேவையாற்றுவதற்கு முன்னர் ஒவ்வொரு தடவையும் க.சூ.பா. அதிகார சபையிலிருந்து அனுமதிப் பத்திரம் ஒன்றை ஒவ்வொரு நிறுவனமும் பெறவேண்டும். ஒழித்தலின் ஆரம்ப முனையிலிருந்து நடைமுறையை அதிகார சபை மேற்பார்வை செய்கின்றது.

க.சூ.பா.அதிகார சபையுடன் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்காக செயலமர்வொன்று 2011 ஜனவரி 27 அன்று நடைபெற்றது. 2011ஆம் ஆண்டின் போது 975 கப்பல்களுக்கு சேவையாற்றுவதற்காக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், கப்பல்களிலிருந்து 19,250 மெற்றிக் தொன்கள் கொண்ட கழிவு எண்ணெயும், 6,000 சதுர மீற்றர்கள் கொண்ட குப்பைக் கழிவும் அகற்றப்பட்டுள்ளன. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 20% கொண்ட அதிகரிப்பொன்றாகும்.

## 09. “தெயட்ட கிருள” பொருட்காட்சி

புத்தலவில் நடைபெற்ற “தெயட்ட கிருள” பொருட்காட்சியில் சூழல் அமைச்சுடனான கூட்டுமுயற்சியுடன் க.சூ.பா.அதிகார சபை பங்கெடுத்தது. இப்பொருட்காட்சியில் பங்கெடுப்பதற்கான திட்டத்தின் கீழ் சூழல் ரீதியில் விழிப்பியலை உயர்த்துவதற்கான கருத்தரங்குகள் 25 பாடசாலைகளில் நடத்தப்பட்டதுடன், இவற்றில் சுமார் 1,500 மாணவர்கள் பங்கெடுத்தனர்.



## 10. பெற்றோலியம் மற்றும் இயற்கை வளங்கள் ஆராய்ச்சி செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வைசெய்தல்

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் மன்னார் குடாநாட்டில் எண்ணெய் ஆராய்ச்சியின் ஆரம்பக்கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மன்னார் குடாநாட்டின் முதலாவது தொகுதியில் 2011இல் முதலாவது தோண்டுதல் ஆரம்பிக்கப்படுவதற்கு அட்டவணைப் படுத்தப்பட்டது. ஆராய்ச்சிகளின் சூழல் தாக்கத்தினை மேற்பார்வை செய்தலும், ஆராய்ச்சியின் காரணமாக சூழலுக்கான சேதத்தைக் குறைந்த பட்சமாக்குவதற்கான பொறுப்பும் க.சூ.பா. அதிகார சபைக்கு சுமத்தப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை க.சூ.பா. அதிகார சபை மதிப்பாய்ந்ததுடன், அதை அங்கீகரிப்பதற்கு அவசியமான நடவடிக்கையை எடுத்தது. சகல தேவைப்பாடுகளையும் திருப்திப் படுத்திய பின்னர் தோண்டுதல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நிறுவனத்திற்கு க.சூ.பா.அதிகார சபையினால் அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டது.

தோண்டுதல் நேரத்தின் போது செயற்பாட்டு பகுதிக்கு க.சூ.பா.அதிகார சபை உத்தியோகத்தர்கள் வருகை தந்து, கப்பலில் இருந்தவாறே பணியை மேற்பார்வை செய்தனர்.







## 3. நிருவாக, மனித வளங்கள் அபிவிருத்தி, உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் சட்டப்பிரிவுகளின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள்

### 3.1 நிருவாகப் பிரிவு

ஆட்சேர்ப்புக்கள் ஒழுக்காற்று நடைமுறைகள், கொள்வனவு ஆகியன உட்பட க.சூ.பா.அதிகார சபையின் சகல நிருவாகப் பணிகளுக்கு பொறுப்பாக இருப்பதே நிருவாகப் பிரிவின் பொறுப்பாகும். க.சூ.பா.அதிகார சபையின் பிரதம நிறைவேற்றுனராக பொது முகாமை யாளரினால் பிரிவு வழி நடத்தப்பட்டு, வழிகாட்டப்படுகின்றது

31.12.2011இலுள்ள உள்ளவாறு பணியாளர் தொடர்பான விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு | தொழிலாற்றும் ஊழியர் கோப்பு | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பிரதம நிறைவேற்று அலுவலர் | 01 | 01 | 00 |
| சிரேஷ்ட முகாமையாளர்கள் | 04 | 00 | 04 |
| நடுத்தர முகாமையாளர்கள் | 11 | 05 | 06 |
| கனிஷ்ட முகாமையாளர்கள் | 12 | 08 | 04 |
| வினைப்படுத்தல் அலுவலர் | 12 | 04 | 08 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) | 02 | 02 | 00 |
| முகாமைத்துவ உதவியாளர் | 08 | 08 | 00 |
| தரப்படுத்தப்பட்ட அலுவலர்கள் | 06 | 05 | 01 |
| ஓரளவு தரப்படுத்தப்பட்ட அலுவலர்கள் | 64 | 47 | 17 |
| தரப்படுத்தப்படாத அலுவலர்கள் | 09 | 08 | 01 |
| **மொத்தம்** | **129** | **88** | **41** |

**ஆண்டின் போது நிருவாகப் பிரிவின் விசேட செயற்பாடுகள்**

1. க.சூ.பா.அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பின் புதிய திட்டத்தை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2011 மே 12 அன்று அங்கீகரித்தது. இதன் பிரகாரம் இதுவரை அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப் பட்டது.

2. ஆட்சேர்ப்பின் புதிய திட்டத்தின் பிரகாரம் 2011இன் போது 31 புதிய உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப் பட்டனர். இவர்களில் 7 உத்தியோகத்தர்கள் உள்ளகப் பதவி யேற்றங்களாக நியமிக்கப்பட்டனர்.

3. கிழக்கு மாகாணத்திற்கு க.சூ.பா. அதிகார சபையின் செயற்பாடுகளை விஸ்தரிக்குமுகமாக திருகோணமலை மாவட்ட அலுவலகமும், கிழக்கு மாகாணத்தின் மாகாண அலுவலகமும் திருகோணமலையில் திறந்து வைக்கப் பட்டது.

4. அதிகார சபையின் வெளிக்கள வேலையைப் பலப்படுத்துமுகமாக திறைசேரியினால் இரு டபிள் கப் வாகனங்கள் வழங்கப்பட்டன.

### 3.2 மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

பயிற்சியின் மூலம் க.சூ.பா.அதிகார சபையின் பணியாளரின் ஆற்றலளவும், திறன் முன்னேற்றமும் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பாகும். மனித வளங்கள் அபிவிருத்திக்காக 2011இல் ஒரு புறம்பான பிரிவு

அமைக்கப்பட்டது. எதிர்காலத்தில் மனித வளங்கள் அபிவிருத்திக்கான திட்டங்கள் இப்பிரிவினால் வகுத்த மைக்கப்பட்டு அமுல்படுத்தப்படும். க.சூ.பா.அதிகார சபையின் பிரதம நிறைவேற்றுனரான பொது முகாமை யாளரினால் பிரிவின் செயற்பாடுகள் வழிகாட்டப்படுகின்றன.

### பிரிவின் பொறுப்புக்கள்

1. பணியாளரின் பயிற்சி தேவைகளை அடையாளம் காணுதல், பயிற்சியை நடத்துவதற்கு பொருத்தமான வள நபர்களையும், நிறுவனங்களையும் தெரிவுசெய்தல். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல். இதன் பிரகாரம் பயிற்சிக்காக பணியாளரை அனுப்பிவைத்தல்.

2. பயிற்சியைக் கண்காணிப்பதுடன், ஏதாவது குறைவுபாடுகள் இருந்தால் அவசியமான தீர்வை யிலான நடவடிக்கையை எடுத்தல்.

3. பணியாளரின் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை மதிப்பாய்தல்.

4. பணியாளரை தரப்படுத்துவதற்கான நடைமுறையையும், பதவியேற்றத் திற்கான திட்டங்களையும் தயாரித்தல்.

5. பொது முகாமையாளரின் அங்கீகாரத்திற்குட்பட்டு பணியாளர் தொடர்பான விபரங்களையும், நிறுவனரீதியிலான செயற்பாடு களையும் அவ்வாறு செய்யுமாறு கோரப்படும் போது நேரடி அமைச்சுக்கும் மற்றும் வேறு வெளிவாரி நிறுவனங்களுக்கும் வழங்குதல்.

## 6. ஊழியர்களின் சேமநலன்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பணியாளரின் பங்கெடுப்பு தொடர்பிலான விபரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

## உள்நாட்டு பயிற்சி திட்டங்களில் பங்கெடுப்பு – 2011

| தொடர் இல. | பெயர் | பதவிப் பெயர் | பயிற்சி நெறியின் தலைப்பு | காலம் | பயிற்சி நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | திருமதி அஸ்வினி காரியவாசம் | சட்ட உத்தியோகத்தர் | ICLP – CCC கப்பற் தொழில் சட்டம் நடைமுறை மீதான சான்றுப்பத்திர நெறி | 03 மாதங்கள் | ICLP மத்தியஸ்த நிலையம் |
| 02 | திருமதி டபிள்யு.எம்.பி.எஸ். குமாரி | செயலாளர் | செயலாளர் பயிற்சிகள் | 04 நாட்கள் | ஸ்கில்ஸ் டெவலொப்மென்ற் பண்ட் லிமிற்ரெட |
| 03 | திருமதி ஆர்.பி.ரணவீர<br>திரு.எல்.பி.ரைரஸ்<br><br>திருமதி பீ.தர்மதாச<br><br>திருமதி ஜி.டி.எஸ். பிரியதர்ஷிகா<br>திருமதி எ.எம்.ஆர்.எ.சந்தனி | உதவி முகாமையாளர்<br>கடல்சார் சூழல் உத்தியோகத்தர்<br>கடல்சார் சூழல் உத்தியோகத்தர்<br>கடல்சார் சூழல் உத்தியோகத்தர்<br>கடல்சார் சூழல் உத்தியோகத்தர் | நிருவாக சட்டம் மற்றும் மனிதவளங்களின் அபிவிருத்தி | 01 நாள் | நிருமாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனம் |
| 04 | சகல உறுப்பினர்களும் | | செயல்நோக்கம் மற்றும் மனப்போக்கிலான மாற்றங்கள் | 01 நாள் | ஸ்கில்ஸ் டெவலொப்மென்ற் பண்ட் லிமிற்ரெட் |
| 05 | திருமதி எச்.ஆர்.டி.சுபாஷினி | கடல் சார் சூழல் உத்தியோகத்தர் | நோக்க முனைப்பிலான கருத்திட்ட திட்டமிடல் | 04 நாட்கள் | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் |
| 06 | திரு.அனில் ஷாந்த<br>திரு.திஸ்ஸநாயக்க<br>திரு.எ.எஸ்.விஜேசிங்க<br>திரு.என்.பெர்னாண்டோ<br>திரு.எஸ்.புஸ்பகுமார | சாரதி | வாகனங்களின் பாதுகாப்பிலானதும் விஞ்ஞானரீதியிலானதுமான உபயோகம் | 01 நாள் | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் |
| 07 | திருமதி எரந்தி பெர்னாண்டோ | கடல் சார் சூழல் உத்தியோகத்தர் | ஆவணப்படுத்தல் மூலங்களை வழங்குதல் | 01 நாள் | தேசிய நூலக ஆவணப்படுத்தல் சேவைகள் சபை |
| 08 | திருமதி ஜி.பி.நிலாஞ்ஜனி | நிருவாக உத்தியோகத்தர் | ஒழுக்காற்று நடைமுறை | 02 நாட்கள் | தேசிய தொழில் ஆய்வுகள் நிறுவனம் |
| 09 | திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும (சட்டத்தரணி )<br>திரு.டபிள்யு.என்.தியம்பலனகே | தலைவர்<br><br>பிரதி பொது முகாமையாளர் | நல்லாட்சியினதும், சட்டத்தின் விதியினதும் ஊடாக செயற்றிறனை மேம்படுத்துவது மீதான கருத்தரங்கு | 01 நாள் | ஸ்கில்ஸ் டெவலொப்மென்ற் பண்ட் லிமிற்ரெட் |
| 10 | திரு.டபிள்யு.என்.தியம்பலனகே | பிரதி பொதுமுகாமையாளர் | சூழல் முகாமைத்துவம் மீதான செயலமர்வு | 04 நாட்கள் | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் |
| 11 | திருமதி எஸ்.டி.ஜி.பி.சமரவீர | முகாமைத்துவ உதவியாளர் | ஆங்கிலத்தில் தொடர்பாடல் திறன்களில் டிப்ளோமா | 15 மாதங்கள் | மிலோடா நிறுவனம் |

**வெளிநாட்டு பயிற்சி திட்டங்களில் பங்கெடுப்பு - 2011**

| தொடர் இல. | பெயர் | பதவிப் பெயர் | பயிற்சி நெறியின் தலைப்பு | காலம் | பயிற்சி நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | திருமதி எ.எம்.ஆர்.சந்தனி | கடல்சார் சூழல் உத்தியோகத்தர் | காலநிலை மாற்றத்திற்கப்பால், நீர் வளங்கள் மீதான தாக்கங்கள், உயிர் பன்னிலையாக்கல் தொடர்பாடல், சமூகத்தின் வகிபங்கு | 2011.06.06 – 2011.06.24 | தாய்லாந்து |
| 02 | திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும (சட்டத்தரணி)<br>ரியர் அட்மிரல் எஸ்.ஆர்.சமரதுங்க | தலைவர்<br>பொது முகாமையாளர் | எண்ணெய் சிந்துதல் பதிலிறுப்பு தகவல் அமர்வு | 2011.06.19 – 2011.06.22 | இந்தியா |
| 03 | திரு.ஆர்.எஸ்.ஆரியபெரும (சட்டத்தரணி) | தலைவர் | கடல்சார் சூழல் பாதுகாப்பு குழுவின் 62ஆவது அமர்வு | 2011.07.11 – 2011.07.15 | இங்கிலாந்து |
| 04 | திருமதி.ரி.எஸ்.ரணசிங்க | உதவி முகாமையாளர் (மேற்கு) | அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உத்தியோகத்தர்களுக்காக சூழல் பாதுகாப்பினதும் முகாமைத்துவத்தினதும் மீதான கருத்தரங்கு | 2011.08.08 – 2011.08.19 | சீனா |
| 05 | திரு. ஆர்.எஸ்.ஆரியபெரும (சட்டத்தரணி) | தலைவர் | சூழல் முகவராண்மைகளுக்கும், தேசிய அணுசக்தி நிறுவனங்களுக்குமான நிறைவேற்று முகாமைத்துவ கூட்டம் | 2011.08.08 – 2011.08.12 | பிலிப்பைன்ஸ் |
| 06 | ரியர் அட்மிரல் எஸ்.ஆர்.சமரதுங்க | பொது முகாமையாளர் | IMO லண்டன் புறோட்டோகோல் மீதான பிராந்திய செயலமர்வு | 2011.08.24 2011.08.26 | தாய்லாந்து |
| 07 | திருமதி எரந்தி பெர்னாண்டோ | கடல்சார் சூழல் உத்தியோகத்தர் | சர்வதேச கப்பற் தொழிலிருந்து GHG கழிவுகளை கவனத்திற்கெடுப்பதற்கான உப பிராந்திய செயலமர்வு | 2011.11.15 2011.11.16 | சிங்கப்பூர் |

## 3.3 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

தலைவரின் நேரடியான மேற்பார்வை யினதும், வழிகாட்டலினதும் கீழ் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு இயங்குகின்றது. அதிகார சபையின் நிதிசார், செயற்பாட்டு, நிருவாக மற்றும் சட்டப் பிரிவுகளின் பணியை அவதானிப்பதும், தீர்மானமொன்றுக்கு தலைவருக்கு தமது கண்டுபிடிப்புக்களைச் சமர்ப்பிப்பதுமே பிரிவின் பிரதான பொறுப்பாகும்.

கணக்காய்வுப் பிரிவின் பணிகள் பின்வரும் ஆக்கக்கூறுகளை உள்ளட க்குகின்றன:

- அதிகார சபையின் நிதிசார் மற்றும் உள்ளக கட்டுப்பாடு களை மதிப்பாய்தல்.
- நிதிசார் மற்றும் தொழிற் பாட்டிலான செயற்பாடுகளை மதிப்பாய்தல். தொடர்பான நடைமுறைகளை மதிப்பிடுதல் மற்றும் அறிக்கையிடுதல். அவசியப்படுமிடத்து விரிவான விசாரணைகளை நடாத்தி முக்கியமானவை என கருதப் படும் விசேட அம்சங்களினதும், நிகழ்வுகளினதும் மீது அறிக்கையிடல்.
- நிதிசார்ரீதியில் அவசியமற்ற நிதிசார் கட்டுப்பாடுகளினதும், கட்டுப்பாட்டின் வேறு அம்சங்களினதும் பொருளாதார உற்பத்தித்திறனையும், செயற் றிறனையும் விசாரித்தல்.
- அரசாங்க விதிகளினதும், ஒழுங்குவிதிகளினதும் மற்றும் அதிகார சபையின் விதிகளினதும், ஒழுங்கு விதிகளினதும் இணக்கத் தன்மையைப் பரீட்சித்தல்.
- முகாமைத்துவத்தின் தேவை களைப் பொறுத்து அவசரகால சூழ்நிலைகள் மீது விசேட விசாரணைகளை நடத்துதல்.

உள்ளகக் கணக்காய்வின் வருடாந்த திட்டம் மீதான அடிப்படையில் ஆண்டின் போது அதிகார சபையின் சகல பிரிவுகளும் மற்றும் மாகாண அலுவலகங்களும் கணக்காய்வு செய்யப்பட்டதுடன், கணக்காய்வு மீதான மாதாந்த அறிக்கைகள் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

2011இன் போது கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் 4 கூட்டங்கள் நடைபெற்றதுடன், இக்கூட்டங்கள் மீதான அறிக்கைகள் பொருத்தமான நடவடிக்கை க்காக தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

## 3.4 சட்டப் பிரிவு

சட்டப் பிரிவினால் க.சூ.பா.அதிகார சபையின் சட்ட நடவடிக்கைகள் கையாளப்படுகின்றன. 2011இன் போது பிரிவினால் பொறுப்பேற்கப்பட்ட பணி கீழே சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது:

கடற்கரைக்கப்பாலான ஆராய்ச்சி மற்றும் கனிப்பொருள் எண்ணெய்க் கானதும் மற்றும் வேறு தேசிய வளங்களுக்களுக்குமான பயன்பாடு என்ற 2011இன் இல.1 கடல்சார் சூழல் பாதுகாப்பு நியதிச்சட்டம் வரையப்பட்டு மன்னார் குடாநாட்டில் ஆராய்ச்சிப் பணியை கெயின்ஸ் லங்கா லிமிற்றெற் என்ற பெயரிலான இந்திய நிறுவனம் ஆரம்பித்த மாதமான 2011 ஓகஸ்ட்டுக்கு முன்னர் வர்த்தமானியில் வெளியிடப் பட்டது. அதிகார சபைக்கு இச் சட்டம் வருமானமொன்றைத் தோற்றுவித்தது.

01. 2008இன் கடல்சார் தீழ்ப்பு தடுப்பு நியதிச்சட்டம் இல.35இன் பிரிவு 5இன் ஏற்பாடுகளின் கீழ் பத்து ஒழுங்குவிதி கள் வரையப்பட்டதுடன், சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

02. அதிகார சபையின் முன்னுரிமை களின் பிரகாரம் 2011இன் இல.2 எண்ணெய் சேமித்தல் நியதிச்சட்டம் (கடல்சார் தீழ்ப்பு தடுப்பு) மற்றும் 2012இன் இல.1 தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலத் திட்ட நியதிச்சட்டம் ஆகியன அடுத்த வருடத்தின் முதலாவது காலாண்டின் போது இச் சட்டங் களை வர்த்தமானியில் வெளியிடு முகமாக பல சுற்றுக்களைக் கொண்ட பேச்சுவார்த்தைகளில் கலந்துரை யாடப்பட்டன.

03. ஏதாவது பழுதுபார்த்தலின்றி கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக பாணந்துறைக்கு அப்பால் நங்கூரமிடப்பட்டுள்ள சைப்பிரஸ் கொடியுடனான கப்பல் ஒன்று மீதான தகவல் கிடைத்ததன் பேரில் கடுமையானளவு பழுதடைந்த கப்பலொன்றிலிருந்து எழும் நாட்டின் தெற்கு மற்றும் வடக்குப் பிராந்தியங்களிலுள்ள கரையோர வலயத்திற்கு சூழல் தீழ்ப்பின் அபாயத்தை கரிசனைக்கெடுத்தும், இலங்கையில் சுற்றுலா பயண த்திற்கான இப்பிராந்தியத்தின் முக்கிய த்துவத்தையும் கரிசனைக்கெடுத்தும் தோன்றுகின்ற அபாயத்தை தவிர்ப்பதற்கான அவசியம் மீது சட்ட உத்தியோகத்தரினால் கொழும்பில் மேல் நீதிமன்றத்தில் வாய்மொழி யிலான பிரதிநிதித்துவம் செய்யப் பட்டது. எனவே, கடல்சார் சூழலின் தீழ்ப்பினை தவிர்ப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் க.சூ.பா.அதிகார சபை மீது சுமத்தப்பட்டுள்ள நியதியாக்க பொறுப்பின் பிரகாரம் எடுக்கப்பட்டன.

04. க.சூ.பா.அதிகார சபையுடன் உரித் தாக்கப்பட்டுள்ள சட்டபூர்வ அதிகாரங்கள் மீது பொதுமக்களின் விழிப்பியலை உயர்த்தும் முக்கிய த்துவத்தின் நிமித்தம் க.சூ.பா. அதிகார சபையின் செயற்பாட்டுப் பிரிவினாலும் மற்றும் மாவட்ட அலுவலகங்களினாலும் ஒழுங்கு படுத்தப்பட்ட செயலமர்வுகளில் க.சூ.பா. அதிகார சபையின் சட்டபூர்வ அதிகாரம் மீது பெருமளவு விரிவுரைகளை சட்ட உத்தியோகத்தர் ஆற்றினார்.

## 3.5 நிதிப் பிரிவு

க.சூ.பா.அதிகார சபையின் நிதிசார் முகாமைத்துவத்திற்கு நிதிப் பிரிவு பொறுப்பாகும். க.சூ.பா.அதிகார சபையின் சகல செயற்பாடுகளுக்கான நிதிசார் வளங்களைப் பெறுதல் மற்றும் நிதிசார் வளங்களின் ஒதுக்கீடு ஆகியன இப்பிரிவினால் கையாளப்படுகின்றன. மிகவும் செயற்றிறனான சாத்தியமான தன்மையில் நிதிசார் சேவைகளை வழங்குதல், தொடர்பான விடயங்களில் பணியாளரை வழிகாட்டுதல், நிதிசார் தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

மற்றும் கண்காணித்தல் ஆகியனவே பிரிவின் அடிப்படை நோக்கங்களாகும்.

**செயற்பாடுகள்**

1. வருடாந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பிடுகளைத் தயாரித்தல்.
2. நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்தல்.
3. நிதிசார் கூற்றுக்களினதும், மாதாந்த வரவு-செலவுத் திட்டங்களினதும் மீதான அறிக்கை களை வழங்குதல்.
4. சம்பளங்களினதும், படிகளினதும் கொடுப்பனவுகளையும், அவற்றின் பதிவேடுகளையும் வைத்திருத்தல்.
5. சகல கருத்திட்டங்களின் கணக்கு களை வைத்திருத்தல்.
6. சகல கொடுப்பனவுகளையும் கையாள்தல்.
7. கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பில் கணக்குகளைப் பராமரித்தல்.
8. வங்கிகளுடன் ஒருங்கிணைப்பு.
9. கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்துடன் ஒருங்கி ணைப்பு.
10. முதலீடுகளினதும் மற்றும் வேறு செயற்பாடுகளினதும் முகாமை த்துவம்.

ஆண்டின் போது பொறுப்பேற்கப்பட்ட விசேட செயற்பாடுகள்

1. 12 மாதங்களுக்கான சம்பளமாக கடனொன்றை ஊழியர்களுக்கு வழங்குவதற்கான கடன் திட்ட மொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் கடன்களாக 24 ஊழியர்களுக்கு ரூபா 4,939,000 வழங்கப்பட்டது.

2. நடைமுறைக் கணக்குகளிலிருந்த மீதியானது ஆண்டின் போது வங்கியில் ஒரு நாள் வைப்புக்களாக வைப்பிலிடப்பட்டது. இந் நடவடிக்கையிலிருந்து ஈட்டப் பட்ட வட்டி 2011ஆம் ஆண்டுக்கு ரூபா 207,403.15 ஆகும்.

3. 2008இன் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு தடுப்பு நியதிச்சட்டத்தின் கீழ் க.சூ.பா.அதிகார சபையினால் புறம்பான நிதியமொன்று பராமரிக்கப் படுகின்றது. 2010இன் போது அபராதங்கள் ஊடாக அதிகார சபையினால் ஈட்டப்பட்ட ரூபா 10 மில்லியன் கொண்ட வருமானம் விசேட நிதியத்தின் ஆரம்பித்து வைத்தலுக்கான மீளப்பெறுதல் வரை திறைசேரி உண்டியிலில் மூலதன மிடப்பட்டது. இந் நடவடிக்கையினால் ஈட்டப்பட்ட வருமானம் கீழே வழங்கப் பட்டுள்ளது:

| மூலதன பெறுமதி (ரூபா) | வட்டி (ரூபா) | 2011 டிசம்பர் 31இல் உள்ளவாறு மொத்தப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 9,999,999.75 | 709,914.25 | 10,709,914.00 |

4. அதிகார சபையின் வேண்டுகோளின் மீது மானியமொன்றாக 2 டபிள் கப்கள் கிடைத்தமை ஆண்டின் போது நிதிப்பிரிவின் சாதனையொன்றாகும்.

## 4. வருமானம்

### 2005 முதல் 2011 வரை அதிகார சபையின் வருமானம்


2011இன் போது அதிகார சபையின் வருமானம் 2010ஐ விட 125% உயர்வானதாகும். அதிகரிப்பு பிரதானமாக பின்வருவனவற்றின் காரணமாகும்.

1. அனுமதிச் சீட்டுக்களின் வளங் களுக்கான கட்டணங்களின் அதிகரிப்பு ரூபா 3,000இலிருந்து ரூபா 4,000க்கு அதிகரிக்கப்பட்டது.

2. எண்ணெய் ஆராய்ச்சிக்கு சூழல் மதிப்பீட்டு அனுமதிச்சீட்டுக்களின் வழங்கல்.

3. வரவேற்பு சேவையைக் கோருகின்ற கப்பல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு.

**2005 முதல் 2011 வரை அதிகார சபையின் வருமானத்தில் அதிகரிப்பு**




**3.5.6 நிதிசார் முன்னேற்ற அறிக்கை – ஆண்டு 2011 – மீளவரும் செலவினம்**

| நோக்க குறியீடு | வகுதி/நோக்கத் தலைப்பு | ஒதுக்கீடு 2011 | 31 டிசம்பர் 2011 வரை செலவினம் | 31 டிசம்பர் 2011இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | **மீளவரும் செலவினம்** | | | |
| | **ஆளணியினர் வேதனாதிகள்** | | | |
| 1001 | சம்பளங்கள், ஊதியங்கள் | 35,377,000.00 | 27,951,854.45 | 7,425 ,145.55 |
| 1002 | மேலதிக நேரவேலை/ விடுமுறைக் கொடுப்பனவு | 1,000,000.00 | 510,158.75 | 489,841.25 |
| 1003 | வேறு படிகள் | 520,000.00 | 324,350.00 | 195,650.00 |
| | **உப மொத்தம்** | **36,897,000.00** | **28,786,363.20** | **8,110 ,636.80** |
| | **பிரயாணச் செலவினங்கள்** | | | |
| 1101 | உள்நாடு | 1,400,000.00 | 1,129,619.44 | 270,380.56 |
| 1102 | வெளிநாடு | 1,270,000.00 | 1,048,923.61 | 221,076.39 |
| | **உப மொத்தம்** | **2,670,000.00** | **2,178,543.05** | **491,456.95** |
| | **விநியோகங்கள்** | | | |
| 1201 | காகிதாதி, அலுவலக தேவைகள் | 660,000.00 | 493,150.46 | 166,849.54 |
| 1202 | எரிபொருள், உராய்வு நீக்கிகள் | 1,300,000.00 | 817,535.50 | 482,464.50 |
| 1205 | வேறு | 300,000.00 | 143,608.00 | 156,392.00 |
| | **உப மொத்தம்** | **2,260,000.00** | **1,454,293.96** | **805,706.04** |
| | **பராமரிப்புச் செலவினம்** | | | |
| 1301 | வாகனங்கள் | 1,275,000.00 | 870,473.94 | 404,526.06 |
| 1302 | பொறி இயந்திராதி, உபகரணங்கள் | 725,000.00 | 498,326.22 | 226,673.78 |
| 1303 | கட்டிடம், கட்டமைப்புக்கள் | 300,000.00 | 54,209.00 | 245,791.00 |
| | **உப மொத்தம்** | **2,300,000.00** | **1,423,009.16** | **631,199.84** |
| | **ஒப்பந்தச் சேவைகள்** | | | |
| 1402 | தபால், தொலைதொடர்பு | 963,000.00 | 709,513.70 | 253,486.30 |
| 1403 | மின்சாரம், நீர் | 1,450,000.00 | 1,251,219.97 | 198,780.03 |
| 1404 | வாடகை, சோலைவரிகள், வரிகள் | 6,660,000.00 | 5,921,005.00 | 738,995.00 |
| 1405 | வேறு | 2,050,000.00 | 1,748,237.84 | 301,762.16 |
| | **உப மொத்தம்** | **11,123,000.00** | **9,629,976.51** | **1,493,023.49** |
| | **மொத்த மீளவரும் செலவினம்** | **55,250,000.00** | **43,472,185.88** | **11,532,023.12** |

### 3.5.7 நிதிசார் முன்னேற்ற அறிக்கை – ஆண்டு 2011 – மூலதனச் செலவினம்

| நோக்க குறியீடு | வகுதி/நோக்கத் தலைப்பு | ஒதுக்கீடு 2011 | 31 டிசம்பர் 2011 வரை செலவினம் | 31 டிசம்பர் 2011இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | **புனரமைப்பு, மூலதன சொத்துக்களின் மேம்படுத்தல்** | | | |
| 2001 | கட்டிடம், கட்டமைப்புக்கள் | 500,000.00 | 22,157.14 | 477,842.86 |
| 2002 | பொறி இயந்திராதி, உபகரணங்கள் | 500,000.00 | 312,902.89 | 187,097.11 |
| 2003 | வாகனங்கள் | 1,000,000.00 | 645,878.93 | 354,121.07 |
| | **உப மொத்தம்** | 2,000,000.00 | 980,938.96 | 1,019,061.04 |
| | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு, மேம்படுத்தல்** | | | |
| 2101 | வாகனங்கள் | - | - | - |
| 2102 | மரத்தளபாடங்கள், உபகரணங்கள் | 1,000,000.00 | 927,700.28 | 72,299.72 |
| 2103 | இயந்திராதி, உபகரணம் | 2,000,000.00 | 1,655,640.00 | 344,360.00 |
| | **உப மொத்தம்** | 3,000,000.00 | 2,583,340.28 | 416,659.72 |
| 2502 | **வேறு** | | | |
| | 1. ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் - NOSCOP | 6,200,000.00 | 3,943,929.48 | 2,254,070.52 |
| | 2. ஒழுங்கு விதிகளுக்கும், சர்வதேச சமவாயத்திற்கும் தொடர்பான விடயங்கள் | 300,000.00 | 180,115.00 | 119,885.00 |
| | 3. பாடசாலை கடல்சார் குழு | 2,550,000.00 | 2,066,698.34 | 483,301.66 |
| | 4. விழிப்பியல் திட்டங்கள் | 250,000.00 | 326,656.64 | (76,656.64) |
| | 5. சொந்துரு சௌர திட்டம் | 5,250,000.00 | 5,521,563.02 | (271,563.02) |
| | 6. மீன்பிடித்தொழில் தொடர்பில் கடல்சார் தீழப்பைத் தடுத்தல் | 5,550,000.00 | 1,238,666.71 | 4,261,333.29 |
| | 7. நீரின் தரத்தைக் கண்காணித்தல் திட்டம் | 2,100,000.00 | 1,809,679.00 | 290,321.00 |
| | 8. ஆய்வுகூடங்களின் அபிவிருத்தி | 1,500,000.00 | 1,414,802.13 | 85,197.87 |
| | 9. கழிவு உபசரணை வசதிகள் | 600,000.00 | 854 ,666.44 | (254,666.44) |
| | 10. மேம்படுத்தல் - பிரச்சாரத் திட்டங்கள் | 2,500,000.00 | 2,045,970.00 | 454,030.00 |
| | 11. தெயற்ற கிருள அபிவிருத்தித் திட்டம் | 650,000.00 | 439,380.00 | 210,620.00 |
| | 12. புபுதமு கம்பஹா திட்டம் | 1,200,000.00 | 500,245.00 | 699,755.00 |
| | 13. கடல்சார் ஆராய்ச்சி திட்டம் | 400,000.00 | 273,497.34 | 126,502.66 |
| | 14. மனித வள அபிவிருத்தி | 1,000,000.00 | 931,896.52 | 68,103.48 |
| | **மொத்தம்** | **30,000,000.00** | **21,547,765.62** | **8,452,234.00** |
| | **மொத்த மூலதனச் செலவினம்** | **35,000,000.00** | | |

# 04. அதிகார சபையின் இறுதிக் கூற்றுக்கள்

## 4.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

### 4.1.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2011ஆம் ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள் பொதுவான ஏற்றுக் கொள்ளப்படும் கணக்கீட்டுக் கொள்கை களுடன் இணங்கும் வரலாற்றுரீதியிலான ஆகுசெலவு மீதான அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

திரண்ட அடிப்படை மீது வருமானமும், செலவினமும் கணக்கிடப்பட்டுள்ளதுடன், சகல அறியப்பட்ட பொறுப்புக்களுக்கும் கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டு ள்ளது.

### 4.1.2 தயாரிப்பின் அடிப்படை

நிதிசார் நிலையின் கூற்று, நிதிசார் செயற்றிறனின் கூற்று, நிகர சொத்துக்கள்/ ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று, பணப்புழக்கக் கூற்று, குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிசார் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவற்றை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் நிதிசார் கூற்றுக்கள் கொண்டுள்ளன. இக்கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமம் மற்றும் அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் ஆகியவற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டிலிருந்து செயற்படத் தக்கதாக SLPSAS ஊடாக, அதன் நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும், சமர்ப்பிப்பதற்கும் 2010ஆம் ஆண்டிலிருந்து செயற்படத் தக்கதாக இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை பயன்படுத்து கிறது.

நிதிசார் கூற்றுக்கள் SLPSAS 01இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுவதுடன், SLPSAS கிட்டாதவிடத்து, இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்காக பிரயோகிக்கப்படுகின்றது.

### 4.1.3 ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள்

அவற்றின் ஆகுசெலவில் ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. அவற்றின் பயனுள்ள ஆயுளின் மேலாக அவற்றின் ஆகு செலவை பெறுமதியழிப்பதற்காக நேர் கோட்டு அடிப்படை மீது அவை மதிப்பிறக்கப்பட்டுள்ளன. அவற்றை மதிப்பிறக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட வீதங்கள் வருமாறு:

| சொத்து | மதிப்பிறக்கம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| கணனிகள் மற்றும் தொடர்பான உபகரணங்கள் | 15% |
| வேறு அலுவலக உபகரணங்கள் | 15% |
| தொலைபேசி | 15% |
| நடமாடும் தொலைபேசி | 10% |
| வீட்டுச் சாதனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 10% |
| ஆய்வுகூட மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் | 10% |
| வெளி கப்பல் இயந்திரம் | 20% |
| மிதவை இறப்பர் கப்பல் | 20% |
| கொள்கலனொன்றின் உள்ளே நிறுவப்பட்ட அலுவலகம் | 20% |

ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் தொடர்பில் கணக்குகளை வைத்திருப்பதில் SLAS 18ஐ அதிகார சபை பின்பற்றுகின்றது.

### 4.1.4 வருமானம்

அரசாங்கத்திலிருந்து கிட்டுகின்ற உதவுதொகைகளை அதிகாரசபையின் பிரதான வருமானம் கொண்டுள்ளது. மேலதிகமாக, கழிவு உபசரணை சேவை களுக்கான உத்தரவுப்பத்திரங்களை வழங்குவதன் மூலமும், எண்ணெய் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கான அனுமதிச்சீட்டுக்களை வழங்குவதன்

மூலமும் வருமானமொன்று தோற்று விக்கப்படுகின்றது.

#### 4.1.4.1 அதிகாரசபையினால் தோற்று விக்கப்பட்ட வருமானம்

அதிகாரசபையினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் திரண்ட அடிப்படையின் மீது கணக்கிடப்படுகின்றது.

#### 4.1.4.2 இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைத்த உதவுதொகைகள்

மூலதனம் மற்றும் மீளவரும் என இரு வகைகளைக் கொண்ட உதவு தொகை களை அதிகாரசபை பெறுகின்றது. இந்த உதவுதொகைகளைக் கணக்கிடுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கையானது பின்வருமாறு SLAS 24இன் மீதான அடிப்படையிலானதாகும்.

#### 4.1.4.3 மூலதன உதவுதொகைகள்

ஆதனம், பொறி மற்றும் சாதனம் ஆகியவற்றின் கையடக்கம் அல்லது நிருமாணம் ஆகியவற்றுக்கு கிடைத்த அரசாங்க உதவுதொகைகள் அத்தகைய ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் சாதனத்தினதும் பயனுள்ள ஆயுளைக் கொண்ட காலத்தின் மேலாக வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

இலங்கையின் கடல்சார் தீழ்ப்பினை தடுப்பது தொடர்பான செயற்பாடுகளுக்கு கிடைத்த மூலதன உதவுதொகைகள் இயற்கையாகவே உருப்படியான சொத்துக்களைத் தோற்றுவிக்கின்றன. நியமங்களில் (SLAS 37) விளக்கமளிக்கப் பட்டுள்ள சொத்துக்களின் அங்கீகாரத் திற்கான மூலப்பிரமாணம் நிறைவேற்றப் படாததினால் கடல்சார் தீழ்ப்பு தடுப்பு செயற்பாடுகள் தொடர்பிலான செலவினம் அத்தகைய செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்ட அல்லது செலவினம் செய்யப்பட்ட ஆண்டில் வருமானமாக அங்கீகரிக்கப் படுகின்றது.

#### 4.1.4.4 மீளவரும் உதவுதொகைகள்

மீளவரும் உதவுதொகைகள் அதே வருடத்தில் ஏற்பட்டுள்ளதனால், அவை கிட்டிய ஆண்டில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### 4.1.5 செலவினம்

திரண்ட அடிப்படையின் மீது செலவினங் களாக செலவு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 4.1.6 பணிக்கொடைக்கான ஏற்பாடு

SLAS 16இன் தேவைப்பாட்டின்படி, ஊழியர்களின் இளைப்பாறுதல் மீது பணிக்கொடைக்கான கொடுப்பனவுக்கு ஏற்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

## 4.2 நிதிசார் நிலையின் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
### நிதிசார் நிலையின் கூற்று
### 2011 டிசம்பர் 31இல் உள்ளவாறு

| **சொத்துக்கள்** | குறிப்பு | **2011**<br>ரூபா | **2010**<br>ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கடன்தருனர்கள் | 11 | 16,935.00 | 98,437.49 |
| வைப்புகள் | 12 | 1,137,800.00 | 480,800.00 |
| முன்-கொடுப்பனவுகள் | 13 | 370,250.73 | 533,538.35 |
| பணியாளர் கடன் | 14 | 6,257,776.56 | 3,929,914.76 |
| திறைசேரி உண்டியல்களில் குறுகிய கால மூலதனம் | | 10,709,913.55 | 9,999,999.75 |
| 31.12.2011இல் உள்ளவாறு பண மீதி | 10 | 13,619,138.16 | 7,069,591.12 |
| **நடைமுறைசாரா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி, சாதனங்கள் | 09 | 39,814,309.96 | 22,359,481.89 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **71,926,123.96** | **44,471,763.35** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| திரண்ட கொடுப்பனவு | 15 | 10,837,615.91 | 273,840.48 |
| **நடைமுறைசாரா பொறுப்புக்கள்** | | | |
| கடல்சார் சூழல் பாதுகாப்பு நிதியம் | | 12,309,913.55 | 11,600,000.00 |
| இடுக்கண் கடனுக்கான நிதியங்கள் | 16 | 6,389,200.68 | 6,204,711.22 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 17 | 3,756,087.50 | 2,866,922.50 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **33,292,817.64** | **20,945,474.20** |
| **நிகர சொத்துக்கள்** | | **38,633,306.31** | **23,526,289.15** |
| **ஒப்புரவு** | | | |
| அரசாங்க உதவுதொகைகள் மற்றும் மூலதனம் | 18 | 39,814,311.09 | 22,359,482.03 |
| திரண்ட மேன்மிகை/பற்றாக்குறை | 19 | (1,181,004.78) | 1,166,807.12 |
| **மொத்த ஒப்புரவு** | | **38,633,306.32** | **23,526,289.15** |

## 4.3 நிதிசார் செயற்றிறனின் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
### 2011 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
### நிதிசார் செயற்றிறனின் கூற்று

| வருமானம் | குறிப்பு | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|
| திறைசேரி உதவுதொகைகள் | 1 | 53,327,215.80 | 48,164,438.86 |
| பதிவிலிருந்தும், அனுமதிப் பத்திரங்களிலிருந்தும் வருமானம் | 2 | 9,242,201.03 | 4,438,000.00 |
| வேறு வருமானம் | 3 | 969,145.95 | 380,304.19 |
| **மொத்த வருமானம்** | | **63,538,562.78** | **52,982,743.05** |
| **செலவினம்** | | | |
| ஆளணியினர் வேதனாதிகள் | 4 | 29,670,533.99 | 26,341,796.16 |
| விநியோகங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பாவனைக்குரியவைகள் | 5 | 2,852,673.76 | 2,398,219.34 |
| வேறு மீளவரும் செலவினம் | 6 | 11,975,763.90 | 9,554,829.06 |
| உதவுதொகை மற்றும் வேறு கைமாற்றத்திலான கொடுப்பனவு | 7 | 13,031,810.11 | 11,000,148.32 |
| நிதிசார் செலவினங்கள் | 8 | 40,142.30 | 20,195.00 |
| நிலையான சொத்துக்களுக்கான மதிப்பிறக்கம் | 9 | 5,825,405.76 | 3,713,425.21 |
| **மொத்தச் செலவினம்** | | **63,396,329.82** | **53,028,613.09** |
| **காலத்திற்கான பற்றாக்குறை/மேண்மிகை** | | **142,232.96** | **(45,870.04)** |

## 4.4 ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
### 2011 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
### நிகர சொத்துக்களில்/ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று

| | மூலதன உதவுதொகை (ரூபா) | திரண்ட மேன்மிகை/ பற்றாக்குறை (ரூபா) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|
| 31/12/2010இல் உள்ளவாறு மீதி | 22,359,482.03 | 1,166,807.12 | 23,526,289.14 |
| மூலதன உதவுதொகைக்கு கைமாற்றம் | - | (2,490,044.86) | - |
| 01.01.2011இல் உள்ளவாறு மீள்குறிப்பிடப்பட்ட மீதி | 22,359,482.03 | (1,323,237.74) | 21,036,244.29 |
| கிடைத்த மூலதன உதவுதொகைகள் | 36,312,044.86 | - | 36,312,044.86 |
| வருமானத்திற்கு கைமாற்றப்பட்ட மூலதன உதவுதொகை (SLAS 24) | (18,857,215.80) | - | (18,857,215.80) |
| ஆண்டுக்கான மேன்மிகை/(பற்றாக்குறை) | - | 142,232.96 | 142,232.96 |
| **31.12.2011இல் உள்ளவாறு மீதி** | **39,814,311.09** | **(1,181,004.78)** | **38,633,306.31** |

## 4.5 பணப்புழக்கக் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
### பணப்புழக்கக்கூற்று கூற்று
### 2011 டிசம்பர் 31இல் உள்ளவாறு

| | 2011 (ரூபா) | 2010 (ரூபா) |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | |
| செலவினத்திற்கு மேலான வருமானத்தின் மேன்மிகை | 142,232.96 | (45,870.04) |
| **பின்வருவனவற்றுக்கு சீராக்கல்:** | | |
| மதிப்பிறக்கம் | 5,825,405.76 | 3,713,425.21 |
| ஆரம்ப மீதி | 2,490,044.86 | 30,000.00 |
| P&Lக்கான முற்பண கட்டணம் (2010இல் கொடுப்பனவு செய்யப்பட்டது) | 84,937.50 | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 889,165.00 | 602,947.50 |
| SLAS 24இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வருமானம் (முன்னைய ஆண்டுகளிலிருந்து கிடைத்த உதவுதொகைகளிலிருந்து) | (18,857,215.80) | (14,713,573.46) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களின் முன் தொழிற்படு மேன்மிகை/பற்றாக்குறை** | **(9,425,429.72)** | **(10,413,070.79)** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| வைப்பில் (அதிகரிப்பு)/குறைப்பு) | (657,000.00) | (105,000.00) |
| முன்கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு)/குறைப்பு) | 163,287.62 | (148,806.31) |
| கடன்தருனர்களில் (அதிகரிப்பு)/குறைப்பு) | (3,435.00) | (76,225.24) |
| நடைமுறைப் பொறுப்புக்களில் குறைப்பு/அதிகரிப்பு | 10,563,775.43 | (61,729.15) |
| **தொழிற்படு செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம்** | **641,198.33** | **(10,804,831.49)** |
| **முதலீட்டு செயற்பாடுகள்** | | |
| திறைசேரி உண்டியல்களில் மூலதனம் | (10,709,913.55) | (9,999,999.75) |
| ஆதனம், பொறி, சாதனத்தின் கையகப்படுத்தல் | (4,570,279.08) | (8,021,851.68) |
| பணியாளர் கடனிலிருந்து நிதியங்கள் | 184,489.46 | 106,568.01 |
| திறைசேரி உண்டியல்களிலிருந்து வட்டி | 709,913.55 | - |
| பணியாளர் கடனில் (அதிகரிப்பு)/குறைப்பு | (2,327,861.80) | (1,871,062.02) |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து நிகர பணப்புழக்கம்** | **(16,713,651.42)** | **(19,786,345.44)** |
| **நிதிப்படுத்தல் செயற்பாடுகள்** | | |
| MT Granba நிகழ்விலிருந்து கிடைத்த நிதியம் | 0 | 15,600,000.00 |
| மூலதன செலவினத்திற்கு அரசாங்க உதவுதொகை | 22,622,000.00 | 19,022,000.00 |
| **நிதிப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து நிகர பணம்** | **22,622,000.00** | **34,622,000.00** |
| **பணத்திலும், பண சமப்படுத்தல்களிலும் நிகர அதிகரிப்பு/குறைப்பு** | **6,549,546.91** | **4,030,823.07** |
| **ஆண்டின் ஆரம்பத்தில் பண மற்றும் பண சமப்படுத்தல்களை** | **7,069,591.10** | **3,038,768.03** |
| **ஆண்டின் இறுதியில் பண மற்றும் பண சமப்படுத்தல்கள்** | **13,619,138.01** | **7,069,591.10** |

## 4.6 நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை
### நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| குறிப்பு 01 | திறைசேரி உதவுதொகைகள் | |
|---|---|---|
| **திறைசேரி உதவுதொகைகள்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| மீளவரும் உதவுதொகை | 34,470,000.00 | 33,280,000.00 |
| வருமானத்திற்கு கைமாற்றப்பட்ட மூலதன உதவுதொகை – பண மீதி | - | 170,865.40 |
| வருமானத்திற்கு கைமாற்றப்பட்ட மூலதன உதவுதொகை – நடப்பு வருடம் | 13,031,810.11 | 11,000,148.32 |
| வருமானத்திற்கு கைமாற்றப்பட்ட மூலதன உதவுதொகை – பின்போடப்பட்ட உதவுதொகை | 5,825,405.69 | 3,713,425.14 |
| **மொத்தம்** | **53,327,215.80** | **48,164,438.86** |

| குறிப்பு 02 | கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் | |
|---|---|---|
| **கழிவு உபசரணை சேவைக்கட்டணம்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| கழிவு உபசரணை சேவை – பதிவுக் கட்டணம் | 2,040,500.00 | 2,195,000.00 |
| கழிவு உபசரணை சேவை – அனுமதிச்சீட்டுக் கட்டணம் | 3,839,000.00 | 2,215,000.00 |
| கழிவு உபசரணை சேவை – விண்ணப்பக் கட்டணம் | 9,000.00 | 13,000.00 |
| கழிவு உபசரணை சேவை – விண்ணப்பக் கட்டணம் (2011க்கு 2010 கிடைத்தவை) | 31,000.00 | 15,000.00 |
| இயற்கை வளங்கள் பிரித்தெடுப்பு – அனுமதிச்சீட்டுக் கட்டணம் | 3,289,803.00 | - |
| இயற்கை வளங்கள் பிரித்தெடுப்பு – விண்ணப்பக் கட்டணம் | 32,898.03 | - |
| **மொத்தம்** | **9,242,201.03** | **4,438,000.00** |

| குறிப்பு 03 | வேறு வருமானம் | |
|---|---|---|
| **வேறு வருமானம்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| வேறு வருமானம் | 748,500.00 | 377,150.00 |
| புத்தக முற்பண வட்டி | 3,117.80 | 3,154.19 |
| காசோலை இரத்தாக்கல் | 10,125.00 | - |
| வட்டி வருமானம் | 207,403.15 | - |
| **மொத்தம்** | **969,145.95** | **380,304.19** |

| குறிப்பு 04 | ஆளணியினர் வேதனாதிகள் | |
|---|---|---|
| **ஆளணியினர் வேதனாதிகள்/ஊழியர் நன்மைகள்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| சம்பளங்கள் மற்றும ஊதியங்கள் | 27,951,854.45 | 25,196,278.83 |
| மேலதிக நேரவேலை/ விடுமுறைக் கொடுப்பனவு | 488,814.54 | 469,969.83 |
| வேறு படிகள் | 340,700.00 | 72,600.00 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 889,165.00 | 602,947.50 |
| **மொத்தம்** | **29,670,533.99** | **26,341,796.16** |

| குறிப்பு 05 | விநியோகங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பாவனைக்குரியவை | |
|---|---|---|
| **5.01 விநியோகங்கள்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 493,150.46 | 348,135.99 |
| எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி | 817,535.50 | 644,411.85 |
| சீருடைகள் | 143,608.00 | 44,440.00 |
| **மொத்தம்** | **1,454,293.96** | **1,036,987.84** |
| **5.02 பராமரிப்புச் செலவினம்** | | |
| வாகனங்களின் பராமரிப்புச் செலவினம் | 870,473.94 | 838,648.34 |
| பொறி, எந்திரங்கள், சாதனங்களின் பராமரிப்புச் செலவினம் | 473,696.86 | 383,522.16 |
| அலுவலகப் பராமரிப்பு | 54,209.00 | 139,061.00 |
| **மொத்தம்** | **1,398,379.80** | **1,361,231.50** |

| குறிப்பு 06 | வேறு மீளவரும் செலவினம் | |
|---|---|---|
| **6.01 பிரயாணம்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| உள்நாடு | 1,116,257.86 | 951,853.55 |
| வெளிநாடு | 1,048,923.61 | 350,524.88 |
| **மொத்தம்** | 2,165,181.47 | 1,302,378.48 |
| **6.02 ஒப்பந்தச் சேவைகள்** | | |
| தொலைத்தொடர்பு/தபாலிடல் கட்டணங்கள் | 716,585.48 | 679,632.53 |
| மின்சாரம் மற்றும் நீர் | 1,342,482.69 | 1,080,061.82 |
| அலுவலக வாடகை | 5,932,135.00 | 5,794,435.00 |
| வேறு ஒப்பந்தச் சேவைகள் | 1,656,091.49 | 847,127.59 |
| 2011க்கு முன்கொடுப்பனவாகிய செலவினங்கள் (முன்னைய வருடத்தின் போது கொடுப்பனவாகியது) | 533,538.35 | 384,732.04 |
| 2012க்கு முன்கொடுப்பனவாகிய செலவினங்கள் (2011இன் போது கொடுப்பனவாகியது) | (370,250.58) | (533,538.35) |
| **மொத்தம்** | **9,810,582.43** | **8,252,450.63** |

| குறிப்பு 07 | **உதவு தொகை மற்றும் வேறு கைமாற்றக் கொடுப்பனவுகள்** | |
|---|---|---|
| **உதவு தொகை மற்றும் வேறு கைமாற்றக் கொடுப்பனவுகள்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| ஆண்டுக்கான மொத்த மூலதன உதவுதொகை | 36,312,044.86 | 19,022,000.00 |
| **கழிக்குக:** | | |
| மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட தொகை | (23,280,234.75) | (8,021,851.68) |
| **நிதி செயற்றிறனின் கூற்றுக்காக கைமாற்றப்பட்ட தொகை** | **13,031,810.11** | **11,000,148.32** |

| குறிப்பு 08 | **நிதிசார் செலவினம்** | |
|---|---|---|
| **நிதிசார் செலவினம்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| வங்கிக் கட்டணங்கள் | 40,142.30 | 20,195.00 |
| **மொத்தம்** | **40,142.30** | **20,195.00** |

| குறிப்பு 09 | **ஆதனம், பொறி, சாதனங்களின் மதிப்பிறக்கம்** | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்களின் வகை** | **ஆகுசெலவு 2011 (ரூபா)** | | | **மதிப்பிறக்கம் 2011 (ரூபா)** | | | |
| | **01 ஜன. 2011** | **மேலதிகங்கள்** | **31 டிச. 2011** | **01 ஜன. 2011** | **மேலதிகங்கள்** | **31 டிச. 2011** | |
| மோட்டார் வாகனங்கள் | 14,614,892.63 | 11,200,000.00 | 25,814,892.63 | 8,920,532.63 | 3,089,538.67 | 12,010,071.30 | 13,804,821.33 |
| மரத்தளபாடங்கள் மற்றும் சாதனங்கள் | 14,682,642.69 | 4,751,150.75 | 19,433,793.44 | 6,902,922.14 | 1,688,407.55 | 8,591,329.69 | 10,842,463.75 |
| தொழில்நுட்பச் சாதனங்கள் | 10,474,595.41 | 7,329,083.08 | 17,803,678.49 | 1,589,194.08 | 1,047,459.54 | 2,636,653.62 | 15,167,024.87 |
| மொத்தம் | **39,772,130.73** | **23,280,233.83** | **63,052,364.56** | **17,412,648.84** | **5,825,405.76** | **23,238,054.60** | **39,814,309.96** |

| குறிப்பு 10 | **பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள்** | |
|---|---|---|
| **பணம் மற்றும் பணச் சமப்படுத்தல்கள்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| இலங்கை வங்கி – 194109 | 13,487,714.04 | 4,794,794.66 |
| மக்கள் வங்கி | 131,424.12 | 2274796.46 |
| **மொத்தம்** | **13,619,138.16** | **7,069,591.12** |

| குறிப்பு 11 | **கடன்தருனர்கள்** | |
|---|---|---|
| **கடன்தருனர்கள்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| ஷெஹான் குரனரு | 13,500.00 | 13,500.00 |
| மீளவரும் முற்பணம் | 3,435.00 | 84,937.49 |
| **மொத்தம்** | **16,935.00** | **98,437.49** |

| குறிப்பு 12 | **வைப்புக்கள்** | |
|---|---|---|
| **வைப்புக்கள்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| ஆரம்ப வைப்பு மீதி | 480,800 | |
| வாடகை | 657,000.00 | 466,500.00 |
| கிடைக்க வேண்டிய வைப்பு | | 14,300.00 |
| **மொத்தம்** | **1,137,800.00** | **480,800.00** |

| குறிப்பு 13 | **முன்-கொடுப்பனவுகள்** | |
|---|---|---|
| **முன்-கொடுப்பனவுகள்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| வாடகை | 180,100.00 | 418,288.89 |
| காப்புறுதி | 153,254.90 | 84,222.21 |
| பராமரிப்பு | 4,656.90 | 29,349.47 |
| வேறு செலவினங்கள் | 32,238.78 | 1,677.78 |
| **மொத்தம்** | **370,250.58** | **533,538.35** |

| குறிப்பு 14 | **அறவிடக்கூடிய பணியாளர் கடன்கள்** | |
|---|---|---|
| **அறவிடக்கூடிய பணியாளர் கடன்கள்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| 01.01.2011இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 3,929,914.76 | 2,058,852.74 |
| **கூட்டுக:** | | |
| ஆண்டின் போது வழங்கப்பட்ட கடன் | 4,939,000.00 | 3,400,000.00 |
| மொத்த அறவிடக்கூடிய தொகை | 8,868,914.76 | 5,458,852.74 |
| **கழிக்குக:** | | |
| ஆண்டின் போது அறவிடப்பட்ட தொகை | 2,611,138.20 | 1,528,937.98 |
| **31.12.2011இல் உள்ளவாறு மீதி** | **6,257,776.56** | **3,929,914.76** |

| குறிப்பு 15 | நடைமுறைப் பொறுப்புக்கள் | |
|---|---|---|
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| கடன்தருனர்கள் | 10,534,736.45 | 0 |
| WRS விண்ணப்பம் மற்றும் அனுமதிச்சீட்டுக் கட்டணம் | 18,000.00 | 31,000.00 |
| கொடுப்பனவுக்குரிய மின்சார மற்றும் நீர் சிட்டை | 107,457.38 | 16,194.66 |
| கொடுப்பனவுக்குரிய வாடகை | 11,130.00 | - |
| கொடுப்பனவுக்குரிய தொலைபேசி சிட்டை | 54,867.37 | 47,795.59 |
| வேறு கொடுப்பனவுக்குரிய செலவினங்கள் | 111,424.71 | 178,850.23 |
| **மொத்தம்** | **10,837,615.91** | **273,840.48** |

| குறிப்பு 16 | பணியாளர் கடன் நிதியம் | |
|---|---|---|
| **பணியாளர் கடன் நிதியம்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| 01.01.2011இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 6,204,711.22 | 2,098,143.21 |
| **கூட்டுக:** | | |
| கிடைத்த மேலதிகமான நிதியம் | | 4,000,000.00 |
| ஆண்டுக்கான வட்டி | 187,125.46 | 107,608.85 |
| **கழிக்குக:** | | |
| வங்கிக் கட்டணங்கள் | 2,636.00 | 1,040.84 |
| **31.12.2011இல் உள்ளவாறு முடிதல் கடன் மீதி** | **6,389,200.68** | **6,204,711.22** |

| குறிப்பு 17 | பணிக்கொடைக்கான ஏற்பாடு | |
|---|---|---|
| **பணிக்கொடைக்கான ஏற்பாடு** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| 01.01.2011இல் உள்ளவாறு ஆரம்பக் கடன் மீதி | 2,866,922.50 | 2,263,975.00 |
| **கூட்டுக:** | | |
| ஆண்டுக்கான ஏற்பாடு | 889,165.00 | 602,947.50 |
| **31.12.2011இல் உள்ளவாறு முடிதல் மீதி** | **3,756,087.50** | **2,866,922.50** |

| குறிப்பு 18 | அரசாங்க உதவுதொகை மற்றும் மூலதனம் | |
|---|---|---|
| **அரசாங்க உதவுதொகை மற்றும் மூலதனம்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| 01.01.2011இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 22,359,482.03 | 18,051,055.49 |
| **கூட்டுக:** | | |
| ஆண்டின் போது கிடைத்த மூலதன உதவுதொகைகள் | 36,312,044.86 | 19,022,000.00 |
| **கழிக்குக:** | | |
| வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது (SLAS 24) | 18,857,215.80 | 14,713,573.46 |
| **31.12.2011இல் உள்ளவாறு முடிதல் மீதி** | **39,814,311.09** | **22,359,482.03** |

| குறிப்பு 19 | திரண்ட பற்றாக்குறை | |
|---|---|---|
| **திரண்ட பற்றாக்குறை** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| 01.01.2011இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 1,166,807.12 | 1,182,677.16 |
| தவறுக்கான செம்மைப்படுத்தல் | | 30,000.00 |
| **கூட்டுக:** | | |
| பின்போடப்பட்ட வருமானத்திற்கான கைமாற்றம் | (2,490,044.86) | |
| ஆண்டுக்கான பற்றாக்குறையிலான மேன்மிகை | 142,232.96 | (45,870.04) |
| **31.12.2011இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **1,181,004.78** | **1,166,807.12** |

| குறிப்பு 20 | கடல்சார் சூழல் பாதுகாப்பு நிதியம் | |
|---|---|---|
| **கடல்சார் சூழல் பாதுகாப்பு நிதியம்** | **2011 (ரூபா)** | **2010 (ரூபா)** |
| 01.01.2011இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | 11,600,000.00 | - |
| MT - GRANBA நிதியங்களின் வரவு | | 11,600,000.00 |
| வட்டி வருமானம் - TB | 709,913.55 | |
| **31.12.2011இல் உள்ளவாறு மூடுதல் மீதி** | **12,309,913.55** | **11,600,000.00** |

2010இல் ஆறு மாதங்களில் முதிர்ச்சியடைகின்ற திறைசேரி உண்டியல்களிலுள்ள ரூபா 10 மில்லியன் கொண்ட மூலதனம் 2011 நொவம்பரில் முதிர்ச்சியடைந்ததுடன், அதன் மூலம் ஈட்டப்பட்ட வட்டி ரூபா 709,517.00 ஆகும். ஆரம்ப மூலதனமும் வட்டியும் திறைசேரி உண்டியல்களில் மீள் மூலதனமிடப்பட்டது.

அதிகார சபையின் நடைமுறைக் கணக்கிலுள்ள மீதி ஆண்டின் போது ஒரு நாள் வைப்புக்களில் மூலதனமிடப்பட்டதுடன், காலத்தின் இறுதியில் இந்த மூலதனம் மீது ஆண்டின் போது ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 207,403.00 ஆகும். இந்த வட்டி வருமானம் ஆண்டுக்கான மொத்த வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆண்டின் போது எண்ணெய் ஆராய்ச்சி பணிக்கான சூழல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் 3,322,701.03 கொண்ட வருமானமொன்று தோற்றுவிக்கப்பட்டதுடன், இவ்வருமானம் அனுமதிப்பத்திரங்களுக்கான வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கழிவைப் பெறுவதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான கட்டணங்கள் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திற்கும் ரூபா 3,000இலிருந்து ரூபா 4,000க்கு அதிகரிக்கப்பட்டது. இதன் விளைவாக கழிவைப் பெறுவதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களிலிருந்து வருமானம் ரூபா 3,390,000.00 வரை அதிகரித்தது.

ஆண்டின் போது ரூபா 23,280,233.83 கொண்ட பெறுமதிக்கு நிலையான சொத்துக்களை அதிகார சபை திரட்டிக் கொண்டது. ரூபா 11,200,000.00இல் மதிப்பிடப்பட்ட மானியமொன்றாக திறைசேரியிலிருந்து பெறப்பட்ட டபிள் கப்கள் இந்த வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலதிகமாக, ரூபா 12,080,333.83 கொண்ட பெறுமதியிலான சொத்துக்கள் அதிகார சபையினால் திரட்டப்பட்டுள்ளன. இந்த சொத்துக்களின் மத்தியில் அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், கணனிகள் மற்றும் கணனி மென்கணியம், வெளியிலான கப்பல் இயந்திரங்கள், இறப்பரினால் செய்யப்பட்ட மிதவைக்

கப்பல், ஆய்வுகூடச் சேவையாற்றுவதற்கான கப்பல் ஆகியன விளங்குகின்றன. எனினும், இந்த சொத்துக்களில் பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் 2012இல் கிடைத்தன. இந்த விடயங்களின் மதிப்பிறக்கத்திற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பின்வரும் சொத்துக்களின் பெறுமதி நடைமுறைப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| சொத்து | பெறுமதி (ரூபா |
|---|---|
| தொடர்பாடல் உபகரணங்கள் | 339,240.00 |
| மேசை கணனிகள் | 639,200.00 |
| ∴பக்ஸ் இயந்திரம் | 94,080.00 |
| ∴பக்ஸ் இயந்திரம் | 38,932.45 |
| இறப்பரினால் செய்யப்பட்ட மிதவைக் கப்பல் | 672,000.00 |
| படகு இயந்திரங்கள் | 510,000.00 |
| மடிக்கணனி | 1,275,000.00 |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 3,030,384.00 |
| அலுவலகமொன்றாக சேவையாற்றுவதற்கான கப்பல் | 750,400.00 |

Acct

See with Sinhala copy

ACCOUNTS DIVISION

(425)

25 SEP 2012

M. E. P. A.

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
# AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | ටීඑස්/අයි/එම්ඊපීඒ/එෆ්ඒ/2011 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2012 සැප්තැම්බර් 18 දින. |

MARINE ENVIRONMENT PROTECTION AUTHORITY

24 SEP 2012

සභාපති,
සමුද්‍ර පරිසර ආරක්ෂණ අධිකාරිය

සමුද්‍ර පරිසර ආරක්ෂණ අධිකාරියේ 2011 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳ 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්ති ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

---

සමාංක හා 2012 අගෝස්තු 16 දිනැති ලිපියට යොමු වේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

එච්.ඒ.එස්. සමරවීර
විගණකාධිපති

පිටපත් :- 1. ලේකම්, මුදල් හා ක්‍රම සම්පාදන අමාත්‍යාංශය
2. ලේකම්, පරිසර අමාත්‍යාංශය


අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No. – ரீஎம்/ஐ/எம்சபீஏ/ எப்ஏ/2011 | ඔබේ අංකය / உமது இல / No. | දිනය / திகதி / Date – 2012 ஆகஸ்ட் 16 |

தலைவர்,
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை.

**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2008 இன் 35 ஆம் இலக்க கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 20 ஆம் ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 மே 22 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථන / தொலைபேசி – 2887028 - 34
ෆැක්ස් අංකය / பெக்ஸ் இல / Fax No. – 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. – oaggov@sltnet.lk

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்ளுடன் இணங்காமை

இலங்கை கணக்கீட்டு நியமம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்க பணிக்கொடை ஒதுக்கீடு தொடர்பாக அதிகாரசபையின் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போது இரண்டு வாகனங்களுக்குரிய பெறுமானத் தேய்வு ஏற்பாடு ரூபா 159,241 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 32 உத்தியோகத்தர்களுக்கான பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கீடு ரூபா 296,742 ஆல் கூடுதலாகவும் 13 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 110,791 ஆல் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகள் பதிவேடுகள் / பட்டோலைகள் என்பவற்றுடன் இணங்கவில்லை.

| விபரம் | கணக்கின் பிரகாரம் மீதி | பதிவேடுகள் / பட்டோலைகள் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பிரயாணச் செலவினம் | 1,116,258 | 1,143,421 | 27,163 |
| ஏனைய செலவினம் | 1,656,091 | 1,696,634 | 40,543 |

### 2.2.4 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

07 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 279,005,389 கூட்டுப் பெறுமதியான மீதிகள் தொடர்பாக பேரேட்டுக் கணக்குகள், செயலாற்றல் அறிக்கை, பொருள் பெறுவனவுக் குறிப்புக்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் | | |
| | நி.பி 757 | | மீளாய்வாண்டிற்காக பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீசுஎ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | (i) 6.5.1 | 2011 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை கணக்குகளுடன் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| | | (ii)6.5.3 | 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டிற்கான அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் அதிகார சபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 142,233 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 45,870 தொகையான பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 188,103 ஆன சாதகமான விலகல் அவதானிக்கப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினுள் அரசின் நன்கொடை ரூபா 5,162,777 ஆலும் அதிகாரசபையின் வருமானம் ரூபா 5,393,043 ஆலும் அதிகரித்தமை மேற்குறித்த சாதகமான விலகலுக்கு காரணமாக அமைந்திருந்தது.

(அ) (i) அதிகாரசபையால் 2011 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது கழிவுப்பொருள் மீள்சுழற்சி சேவைக்கட்டணம் ரூபா 209,500 ஆலும் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 161,000 ஆலும் விண்ணப்பக் கட்டண வருமானம் ரூபா 11,000 ஆலும் குறைவடைந்திருந்தது.

(ii) மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கு உள்ளடக்கப்பட்ட எண்ணைய் பரிமாற்றம் மற்றும் ஏனைய (Bunkering மற்றும் Other ( Fine / Penalties) ஆகிய இரண்டு வருமானங்களில் உள்ளவாறான வருமான உழைப்பு 100% ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 9.2 மில்லியனாக இருந்ததுடன், அது மொத்த வருமான உழைப்பின் 14.5% ஆக இருந்தது. முன்னைய ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 4.8 மில்லியனாக இருந்ததுடன், அது மொத்த வருமான உழைப்பின் 9% ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையின் 2011 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ஆண்டின் மொத்த நிதிஏற்பாடு ரூபா 35,000,000 தொகையாக இருந்ததுடன், ஆண்டின் செயன் முன்னேற்ற

அறிக்கையின் பிரகாரம், உள்ளவாறான செலவினம் ரூபா 25,098,320 ஆக இருந்தது. அது தொடர்பாக கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 8 செயற்பாடுகளுக்கான நிதிஏற்பாடுகளை மிகைத்து ரூபா 2,052,230 தொகை செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) 3 செயற்பாடுகளுக்கான நிதிஏற்பாடுகளான ரூபா 1,100,000 தொகை சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) 8 செயற்பாடுகளுக்கான நிதிஏற்பாடுகளில் 50% அல்லது அதற்கு மேற்பட்ட தொகை சேமிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் தலைவரால் "2011 ஆம் ஆண்டில் மூலதன நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 12.32 மில்லியன் தொகை அதிகாரசபைக்கு திறைசேரியால் விடுவிக்கப்படவில்லையென" அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஈ) செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செயற்பாடுகளில் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டிருக்கவில்லை.

(உ) சர்வதேச நியதிகள் கையொப்பமிடல் ("Signing International Conventions") செயற்பாட்டிற்காக 2010 ஆம் ஆண்டில் ரூபா 30,000 தொகையும் 2011 ஆம் ஆண்டில் ரூபா 450,000 தொகையான நிதிஏற்பாடும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், இச்செயற்பாடுகள் 2 ஆண்டுகளிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பதவியணியினர் சம்பளக் கடன்

அதிகாரசபைக்கு கிடைத்த வருமானத்திலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 6.176 தொகை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட ஊழியர்களுக்காக சம்பளக் கடன்/ இடர்கடன் யோசனைத் திட்டத்திற்காக திறைசேரி அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.. 2011 ஆம் ஆண்டில் ரூபா 4,939,000 கடன்தொகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் 12 மாதச் சம்பளம்,

சம்பளக் கடனாக செலுத்தப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அந்நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்த சம்பளக் கடன் மீதி ரூபா 6,257,776 ஆக இருந்தது.

## 4.3 சர்வதேச சமுத்திர தினத்தை கொண்டாடுதல்

சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை மூலம் சர்வதேச சமுத்திர தினம் ஜெட்லைனர் கப்பலில் 2011 யூன் 08 ஆம் திகதி கொண்டாடுவதற்காக நடாத்தப்பட்ட நினைவு விழாவிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமும் நிதிச் செலவினத்திற்காக பணிப்பாளர் சபைப் பத்திரம் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

இதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 600,000 ஆக இருந்த போதும் உள்ளவாறான செலவினம் ரூபா 1,234,351 தொகையாக இருந்ததுடன், ஒதுக்கப்பட்ட தொகையை மிகைத்து ரூபா 634,351 அதாவது 106% செலவிடப்பட்டிருந்தது. இச்செலவினத்தை மேற்கொள்வதற்காக திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இதற்காக அச்சிடப்பட்ட 1000 "சத் சமுத்தர" சஞ்சிகைப் பிரதிகளுக்காக ரூபா 183,000 தொகை 2011 யூன் 13 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன், 2011 திசெம்பர் 29 ஆம் திகதி வரை பகிர்ந்தளிக்கப்படாமல் எஞ்சியிருந்த புத்தகங்கள் 165 ஆக இருந்தது.

## 4.4 களஞ்சியக் கட்டுப்பாடு

நி.பி 754 இன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டின் இறுதியில் பொருட் பதிவேடு இணக்கம் செய்யப்படாமல் இருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 6,035,071 ஆன பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், பொருள் பெறுவனவுக் குறிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

ஆய்வுகூடத்திற்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக தெரிவுப் பரிசோதனையின் போது ரூபா 2,501,100 ஆன கொள்வனவுகள் 2010

திசெம்பர் மாதத்தில் இடம்பெற்றிருந்ததாக அவதானிக்கப்பட்டது. அத்துடன் அவ் உபகரணங்கள் ஓராண்டு காலமாக எவ்வித செயற்பாட்டிற்கும் பயன்படுத்தாமல் ஆய்வுகூடத்தில் வைக்கப்பட்டிருந்தது. மேலும் ஆய்வுகூடத்தில் 12 பரிசோதனைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அப்பரிசோதனைகள் கணக்காய்வு தினமான 2011 திசெம்பர் வரை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், பரிசோதனைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்களும் மூலப்பொருட்களும் பயன்படுத்தப்படாமல் இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.6 ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஎம/12 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 8.3.9 பந்திக்கு முரணாக அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனமொன்றை சுற்றாடல் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும். அமைச்சில் அவ்வாகனம் இருக்கவில்லை. எவ்வாறாயினும் இவ்வாகனத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக அதிகாரசபையால் ரூபா 31,184 செலவிடப்பட்டிருந்தது.

## 4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 143 ஆக இருந்ததுடன், 03 பதவிகளுக்காக நி.பி 71 இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளவாறான பதவியணியினர் 107 ஆக இருந்தன. 2011 ஆம் ஆண்டில் 36 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆண்டின் போது 21 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(அ) 2009 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 09/1483/360/049 அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் வருடாந்த புதுப்பித்தலுக்கு உட்பட்ட 2009 ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் 2013 மார்ச் 16 ஆம் திகதி வரை அதிகாரசபையின் பொது முகாமையாளரின் சேவை வருடாந்தம்

புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. 2010 ஒக்தோபர் 01 ஆம் திகதி முதல் கணக்காய்வு தினமான 2011 திசெம்பர் 09 ஆம் திகதி வரை ஓராண்டு காலமாக சேவை நீடிப்புச் செய்யப்படாமல் பதவியில் இருந்து கொண்டு சம்பளமாக ரூபா 668,310 தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக தலைவரால் "செயலாளரின் முன் அனுமதிக்காக 2012 மே மாதத்தில் எழுத்துமூல வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது" என பதில் அளிக்கப்பட்டிருந்தது.

4.8 வாகனப் பயன்பாடு

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 இல் நிறுவனத்தினுள் 08 வாகனங்கள் காணப்பட்டதுடன், அதில் 02 ஒதுக்கப்பட்ட வாகனங்களாகவும், 06 குழாம் வாகனங்களாகவும் இருந்தன. ஆண்டின் போது எரிபொருளுக்காக ரூபா 817,535 உம் வாகனப் பராமரிப்பிற்காக ரூபா 870,474 உம் செலவிடப்பட்டிருந்த போதும் ஓட்டப்பதிவேடுகளும் சம்பவப் பதிவேட்டுக் குறிப்புக்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனமொன்று 2007 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன், திருத்த நடவடிக்கைகளுக்காக 2010 நவம்பர் 26 ஆம் திகதி ரூபா 865,030 தொகை செலவிடப்பட்டிருந்தது. திருத்த நடவடிக்கைகள் முறையாகச் மேற்கொள்ளப்பட்டுள்ளதென பொறியியலாளரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 மே 15 ஆம் திகதி வரையில் இவ்வாகனத்தின் திருத்த வேலைகளைப் பூர்த்தி செய்து ஓட்டத்தில் ஈடுபடுத்தும் நிலைக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும் இவ்வாகனத்தின் பதிவுச் சான்றிதழைப் பரிசோதித்த போது அது அமைச்சிற்குச் சொந்தமான வாகனமொன்றாக இருந்ததுடன், 2007 மே 27 ஆம் திகதி அதிகாரசபைக்கு பொறுப்பேற்கப்பட்டு திருத்த நடவடிக்கைகளுக்காக அனுப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்கு நடவடிக்கைகளும் நல்லாளுகையும்

### 5.1 கொள்வனவுத் திட்டம்

2011 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

2011 ஆம் ஆண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. 2011 திசெம்பர் 09 ஆம் திகதி வரை உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், ஒரு உத்தியோகத்தர் மட்டுமே கணக்காய்வுப் பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்தார். ஆண்டின் போது 12 கணக்காய்வு விசாரணைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஆட்சேர்ப்பு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) சொத்துக் கட்டுப்பாடு

எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி